769

ശ്രീ [illegible]

[illegible]

DIGITIZED

Q6:414
N15
11769

769

A. M. D. G.

# திரு இருதய அலுவல்கள்.



TRICHINOPOLY.
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS.

1915.

A. M. D. G.

# திரு இருதய

# அலுவல்கள்.

769
2-1915

Printed and Published by Rev. Br. Joseph, S. J., Superintendent,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

1915

Nihil obstat: T. ROCHE, S.J., cens. dep.




Imprimatur:

+ AUGUSTINUS, S.J.,

*Ep. Trichinopoli*



சேசுவின் திரு இருதயமே!
என் நம்பிக்கையை உமதுபேரில் வைக்கிறேன்.
(300 நாள் பலன்.)

# முகவுரை.

விருத்தாப்பியரான தாய் தந்தையர் கடின வியாதியாயிருக்கையில், ஒரு பிள்ளை வைத்தியரைக் கூப்பிடச் செல்லும், மற்றொரு பிள்ளை கடைக்குச் செல்லும்; இன்னொரு பிள்ளை தலைமாட்டிலிருந்து மருந்துகளை தக்க நேரத்தில் கொடுத்து உதவும், வேறொரு பிள்ளை வீட்டுக்காரியங்கள் சமையல்வேலை முதலியவைகளைப் பார்த்துக்கொள்ளும். ஆனால் என்ன வேலை செய்தபோதிலும், வியாதியாயிருக்கும் தங்கள் தாய் தகப்பன்பேரிலுள்ள சிநேகத்தினிமித்தம் நன்றாய் செய்துமுடிக்கப் பிரயாசப்படுவார்கள். மேலும் சமயா சமயம் தங்கள் அலுவல்களை மாற்றிக்கொண்டு, வைத்தியரைக் கூப்பிடச் சென்ற பிள்ளை தலைமாட்டிலிருந்து உதவிபுரிய ஆசிக்கும், கடைக்குப் போன பிள்ளை வைத்தியரை அழைக்கச் செல்லும்.

இவ்விதமே திரு இருதயத்தின் தாசரும், அளவற்ற நேசம்பொருந்திய அந்தத் திவ்விய இருதயம், மனிதருடைய அசட்டைத்தனம், நன்றியறியாமை, நிந்தை அவமானங்களால் படும் சொல்லொண்ணா வேதனையைப்பார்க்கச் சகியாமல், அதற்கு ஆறுதலுண்டாக்கி, அதற்காக உழைக்கும்படி பற்பல அலுவல்கள் செய்துவருகிறார்கள். எந்த அலுவலை நிறைவேற்றியபோதிலும், திரு இருதயத்தின் மீட்டில் தங்களுக்குள்ள மெய்யான சிநேகத்தைக் காண்பிக்கும்படியாக, மனத்தாராளத்துடனும் ஆவலுடனும் நிறைவேற்றுகிறார்கள். அதே அலுவலைப் பார்ப்பதால் சுபாவமாய் உண்டாகக்கூடிய பத்திக்குறைவை நீக்கி, எப்போதும் அதிகமதிகமான உற்சாகத்துடன் திரு

இருதயத்துக்கு ஊழியம் புரியும்படி, மாதத்துக்கொரு முறை ஒரு அலுவலுக்குப் பதிலாய் மற்றொரு அலுவலை மாற்றிக்கொள்வதுண்டு.

திரு இருதய அலுவல்கள் ஒன்பது. அவைகளாவன: மத்தியஸ்தன், பரிகரிப்போன், ஆராதிப்போன், நேசிப்போன், சீஷன், பலி, ஊழியன், மன்றாடுவோன், ஆத்தும இரட்சண்ணிய ஆவலுள்ளோன்.

முத். மார்க்கரீத் மரியம்மாள் க்ரெவியெ (Greyfie) தாயாருக்குக் கடிதம் எழுதுகையில் ஓர் சகோதரியைப் பற்றி, "அவளைத் திரு இருதயம் மத்தியஸ்தீ அலுவலுக்குத் தெரிந்துகொண்டது...உங்கள் மடத்திலும் அந்த அலுவலுக்குத் திருவுளச்சீட்டு போட்டு ஒரு சகோதரியைக் குறிக்கும்படி ஆசிக்கின்றது...பரிகாரம் பண்ணும் அலுவலுக்கும் ஒரு சகோதரியை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டது......உங்கள் அலுவல் யாதெனில், திரு இருதயத்தின் மகிமைக்காக செய்யப்படும் சகலத்தையும் அந்த நேச இருதயத்துக்கு ஒப்புக்கொடுப்பதே" என்று எழுதியிருக்கிறாள்.

ஆதலால் திரு இருதயத்தால் கேட்கப்பட்டு, முத். மார்க்கரீத்து மரியம்மாள் காலத்திலேயே, இந்தப் பத்திக்கிருத்தியம் துவக்கியிருந்ததென அறிகிறோம். பிறகு திரு இருதயப்பத்தி அதிகமதிகமாகப் பரம்பவே, நாளடைவில் இந்த ஒன்பது அலுவல்களும் உண்டாகி, நிறைவேற்றப்பட்டு வந்தன. தற்காலம் இந்தப் பத்திக்கிருத்தியம் பற்பல சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் மடங்களிலும், திரு இருதயச் சபைகளிலும், பத்தியுள்ள கிறீஸ்துவர்களுக்குள்ளும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த அலுவல்களை முறைப்பிரகாரமென்கிலும் திருவுளச் சீட்டின்படியென்கிலும், ஒவ்வொரு மாதமும் மாற்றிக்கொள்



வது வழக்கம். மாதத்தின் முதல் நாள் அல்லது முதல் வெள்ளிக்கிழமை இம்மாற்றம் செய்வதற்கு ஏற்ற நாளாகும்.

திரு இருதய அலுவலில் யாதொன்றை ஏற்றுக்கொண்டபின், அந்த அலுவலை நிறைவேற்றுவதற்குள்ள காரணங்களையும் அதை நிறைவேற்றும் விதத்தையும்பற்றி, தலை வெள்ளிக்கிழமையன்று சற்று யோசித்து, தியானிப்பது, அந்த அலுவலை சுமுத்திரையாய் செய்வதற்குரிய வழியாகும். இது விஷயத்தில் ஒத்தாசை புரியும்படியாகவே சேசுசபை சங். வெர்மெஷ் சுவாமியார் பிராஞ்சு பாஷையில் எழுதியுள்ள புஸ்தகத்தின் உதவியைக்கொண்டு ஒவ்வொரு அலுவலைக் குறித்தும் விவரமாய் எழுதலானோம். ஒவ்வொரு அலுவலை நிறைவேற்றுவதிலும் சேசுநாதர்சுவாமியின் திவ்விய மாதிரிகையைக் கண்முன்பாகவைத்து அவரைக் கண்டுபாவிப்பது எப்படியென விளக்கினோம்.

திரு இருதயத்தைக் குறித்துச் செய்யும் இந்த அலுவல்களில், மனுஷ பலவீனத்தினிமித்தம், பற்பல குற்றங் குறைகளுண்டாகுமென்பது சகஜமே. இக்குறைகளைப் பரிகரித்து, திரு இருதயத்துக்கு உகந்த வணக்கத்தையும் ஆறுதலையும் வருவிக்கும்படி, இந்த ஒன்பது அலுவலைச் சேர்ந்தோரும், ஒன்பது விலாச சம்மனசுகளோடும் முத். மார்க்கரீத் மரியம்மாளோடும் அவரவர்களுக்கு இஷ்டமான வேறு மோட்சவாசிகளோடும் மனதினால் ஒன்றித்து ஒப்புக்கொடுப்பது நலமாகும். ஏனெனில், இவ்விதமாக, பூலோகவாசிகளின் ஊழியத்திலுள்ள குற்றங் குறைகள் நீங்கும்; பூலோகமும் பரலோகமும் சேர்ந்து, திவ்விய இரட்சகரின் திரு இருதயத்தை ஸ்துதித்து ஆராதிக்கும்.

# திரு இருதய அலுவல்கள்.

## 1-ம் அதிகாரம்.

## மத்தியஸ்தன்.

திரு இருதயம் உன்னைத் தனது மத்தியஸ்தனைத் தெரிந்துகொண்டிருக்கிறது. முத். மார்க்கரீத்து மரியம்மாள் எழுதியிருப்பதுபோல், யார் திரு இருதயத்தைக் குறித்து மனிதர்களுக்குள் மத்தியஸ்த அலுவல் செய்யும்படி குறிக்கப்படுகிறார்களோ, அவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் திரு இருதயமே சர்வேசுரன் சந்நிதியில் அவர்களுடைய மத்தியஸ்தராயிருக்கும். நீ இந்த அலுவலைப் பிரமாணிக்கத்தோடும் பக்தி உருக்கத்தோடும் செய்யும்படி, நமதாண்டவர் எப்படி நமது மத்தியஸ்தராயிருந்திருக்கிறாரென்று கவனித்துப்பார்.

நமது ஆதித்தகப்பனாகிய ஆதாம் அதி உன்னத சர்வேசுரனுடைய கட்டளையை மீறி நடந்ததால், மனுஷ சந்ததியாரெல்லோரும் சர்வேசுரனுக்கு சத்துராதிகளானோம். இந்தத் துரோகம் அளவில்லாத மகிமைப்பிரதாபம் பொருந்திய சர்வேசுரனுக்கு விரோதமாய்க் கட்டிக்கொள்ளப்பட்டதால், அளவற்ற துரோகம். இப்படியிருக்க முற்காலத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட மிருகப்பலிகளின் இரத்தம் இதற்குத் தக்க பரிகாரமாகுமா? ஆகாது. துரோகியான மனிதனே தன் உயிரைப் பலியாக ஒப்புக்

கொடுத்தால், ஏற்ற பரிகாரமாகுமா? ஆகாது. பூலோகத்திலுள்ள சகல மனிதர்களும், பரலோகத்திலுள்ள சகல சம்மனசுகளும் சேர்ந்து, தங்களைப் பலியாக ஒப்புக்கொடுத்தால், இதுவாகிலும் தக்க பரிகாரமாவதற்குப் போதுமா? போதாது. அளவில்லாத துரோகம் எப்படி அளவுமட்டுமுள்ள வஸ்துக்களின் கிரியைகளால் முழுவதும் பரிகரிக்கப்படக்கூடும்? இது கூடாத காரியம். ஆதலால் அளவில்லாத துரோகத்துக்கு சரியான பரிகாரம் செய்ய, அளவற்ற வஸ்துவாகிய சர்வேசுரனே மனிதனாகிப் பரிகாரம் செய்யவேண்டியிருந்தது.

ஆனால் சர்வேசுரன் மனுஷனாய் அவதரிப்பதற்கு யாதொரு கட்டாயமுமில்லை. அவருக்கு நீச மனுஷனுடைய தயவு என்னத்திற்கு? நித்தியகாலமாய் தம்மிலேயே சம்பூரண பேரின்பபாக்கியமுள்ள அவருக்கு குறைவு என்ன? திவ்விய சுதன் நம்மை சர்வேசுரனோடு மத்தியஸ்தம் பண்ணி சமாதானமாக்கும்படி மனுஷனாய்ப் பிறவாமல், நாமே முழுப்பரிகாரம் செலுத்தவேண்டியிருந்திருந்தால், மனுஷ சந்ததி எக்கெதியை அடைந்திருக்கும்!

திவ்விய சுதன் நமதுபேரில் வைத்த பட்சத்தாலும் இரக்கத்தாலும், மனுஷ சுபாவமெடுத்து, ஒரு சிறு குழந்தையாகப் பிறந்தார். இந்தத் திருப்பாலகன் அளவில்லாத சர்வேசுரனாதலால், சர்வேசுரனுக்கு செய்யப்பட்ட துரோகத்தைப் பரிகரித்து, நம்மை அவருடன் சமாதானப்படுத்த, அவருடைய ஒரு சிறு ஜெபம், ஒரு கண்ணீர்த்துளி, ஒரு பெருமூச்சு, ஒரு துளி இரத்தம் போதுமாயிருந்தது. ஆனால் நமது மத்தியஸ்தர் நமக்காக ஜீவித்த 33 வருஷகாலத்தையும், பசிதாகம், களைப்பு, வருத்தங்களையும், கொடிய பாடுகளையும், சிலுவையில் அடைந்த மரணத்தையும் யோசிக்கையில், இவ்வளவு மனத்



தாராளத்துக்கும் அளவற்றநேசத்துக்கும் நாம் எவ்வளவோ நன்றியறிந்திருக்கவேண்டும்! நமது திவ்விய மத்தியஸ்தர் தமது ஜீவிய காலத்தையும், முக்கியமாய் தமது திருப்பாடுகளையும், பேறுபலன்களையும் நமக்காக ஒப்புக்கொடுத்ததுமன்றி, உயிர்த்தெழுந்து மோக்ஷத்துக்கு ஆரோகணமாகி, அர்ச். சின்னப்பர் வசனித்திருப்பது போல், பரலோகத்திலே நமக்காக இடைவிடாமல் தமது பிரம பிதாவிடம் மன்றாடிக்கொண்டிருக்கிறார். மோக்ஷத்தில் செய்யும் இந்த மத்தியஸ்த அலுவலை, பூலோகத்திலும் திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருந்து, நமக்காக இடைவிடாமல் நிறைவேற்றி வருகிறார்.

ஞானஸ்நானத்துக்குப்பின் நீ கட்டிக்கொண்ட பாவங்களைப் பொறுத்து, உன்னை சர்வேசுரனுடன் சமாதானப்படுத்தியவர் உன் திவ்விய மத்தியஸ்தரே. நீ கேட்கும் மன்றாட்டையெல்லாம் அவர் மூலமாய்த்தான் அடைகிறாய். அவருடைய திரு இருதயத்தின் பலன்களைக் குறித்துத்தான் உனக்கு வரப்பிரசாதங்கள் அளிக்கப்படுகின்றன. தேவதாயும், அர்ச்சியசிஷ்டவர்களும் தங்கள் மன்றாட்டுகளால் நமக்கு உதவிபுரியக் கூடுமாயிருப்பது அவர் நிமித்தந்தான். அவருடைய மத்தியஸ்தத்தினால்தான், ஒருநாள் உனக்கு மோக்ஷம் திறக்கப்படும்.

ஆதலால், இந்த நல்ல மத்தியஸ்தருக்கு நீ காட்டவேண்டிய விசுவாசம், அவர்பேரில் வைக்கவேண்டிய நம்பிக்கை, அவருக்குக் காட்டவேண்டிய நன்றியறிதல், அவருடைய ஊழியத்தில் கொண்டிருக்கவேண்டிய பக்தி சுறுசுறுப்பு எப்பேர்ப்பட்டதாயிருக்கவேண்டுமென்று நீ தானே யூகித்துக்கொள்.

சேசுவின் திரு இருதயம் மகா தயாளத்துடன் சகல மனிதரையும் தன்னிடம் வரும்படி அழைக்கின்றது. எல்

லோரையும் பாக்கியவான்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவுமாக்க ஆசிக்கின்றது. ஆனால் பெரும்பான்மையோர் அதைச் சிறிதும் சட்டைபண்ணாமல் அதின் குரலொலிக்கு செவிடர்களாயிருக்கிறார்கள். மனிதர்களை மனிதர்கள் மூலியமாய்த் தன்னிடம் கொண்டுவர ஆசித்து, உன் மூலியமாய் சில ஆத்துமங்களைக் கைக்கொள்ளும்பொருட்டு, திரு இருதயம் உன்னைத் தனது மத்தியஸ்தனைத் தெரிந்திருக்கிறது.

இந்த அலுவலைச் சரிவர நிறைவேற்றும்படி, முதலாவது உன்னை முழுவதும் திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடு. உனது திவ்விய மத்தியஸ்தரின் ஜீவியத்தையும் நடக்கையையும் அடிக்கடி தியானித்து யோசி. உன் அனுதின அலுவல்களை செய்யும்போது, அடிக்கடி திரு இருதயத்தை மனதில் நினைத்து உருக்கமுள்ள சிறு மனவல்லயச் செபங்கள் சொல்லப் பழகு. திரு இருதயத்துக்கு மனவருத்தமுண்டாக்கக்கூடிய சமயங்களையும் பாவங்களையும் விட்டு விலகு.

பிறரை திரு இருதயத்தினிடம் கொண்டுவரும்படி நீ செய்யக்கூடியவைகளாவன: திரு இருதயத்தை சகல மனிதரும் அதிகமதிகமாய் அறிந்து சிநேகித்து சேவிக்கும்படி அடிக்கடி மன்றாடு. இந்தக் கருத்துக்காக உன் வேலைகளையும் துன்ப வருத்தங்களையும் ஒப்புக்கொடு. உன் நன்னடக்கையாலும், உன்னிடம் விளங்கும் திரு இருதயப்பத்தியாலும் பிறருக்கு நன்மாதிரிகையாயிரு. உன்னுடன் புழங்கும் தோழர்களிடமும், உன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சிறு பிள்ளைகள், வேலைக்காரர்கள் முதலியவர்களிடத்திலும் சமயோசிதமாய் திரு இருதயபத்தியை மூட்டப் பிரயாசப்படு. உன் திவ்விய மத்தியஸ்தர் உனக்காகக் காட்டியிருக்கும் சிநேகத்தை



யும் மனத்தாராளத்தையும் கண்முன் வைத்து, கட்டாயத்துக்காகவும் கடமைக்காகவும் செய்வதுபோல் நடக்காமல், உன் முழு இருதயத்துடனும் மனப்பரித்தியாகத்துடனும் உழை. சகலரையும் மீட்கும்படி சகலருக்கும் சகலமுமானதாக மொழிந்தருளிய அர்ச். சின்னப்பரைக் கண்டு பாவிக்கப் பிரயாசப்படு.

இவ்விதம் திரு இருதயத்துக்கும் உன்னைச் சூழ்ந்துள்ள மனிதர்களுக்கும் இடையில் மத்தியஸ்தனாயிருந்து அவர்களைத் திரு இருதயத்தினிடம் கொண்டுவரப் பிரயாசப்படுவாயாகில், உன் முயற்சிகளைத் திரு இருதயம் ஆசீர்வதித்து மிக்க பலன் அளிக்கும்படி செய்து உன் பேறுபலன்களை அதிகரிப்பதுமன்றி, ஓர் நாள் சர்வேசுரனுடைய பயங்கரமான நீதி ஆசனத்தின்முன் நீ நிற்கையில், தாமே உனது மத்தியஸ்தராயிருந்து உன்னைக் காப்பாற்றும்.

## 2-ம் அதிகாரம்.

## பரிகரிப்போன்.

இந்த மாதம் திரு இருதயம் உனக்குப் பரிகரிப்போனின் அலுவலைக் குறித்திருக்கிறது. ஆதலால் திவ்விய சற்பிரசாதத்தில் எழுந்தருளியிருக்கும் உன் நேச ஆண்டவருக்கு விரோதமாய் மனுமக்களால் செய்யப்படும் அவமான துரோகங்கள் எப்பேர்ப்பட்டவையென்றும் அவைகளுக்கு உன்னாலான பரிகாரம் செய்வது எப்படி என்றும் சற்று நிதானித்து யோசி.

திவ்விய ஆண்டவர் நம்மை அநாதபிள்ளைகளாய் விட்டுச் செல்ல மனமின்றி, தாம் மரிக்குமுன் சிநேக சற்பிரசாதமாகிய திவ்விய நற்கருணையை உண்டாக்கி; இடை-

விடாமல் எப்போதும் நமது மத்தியில் குடிகொண்டிருக்கச் சித்தமானார். ஆனால் இந்த ஒப்பற்ற நேசத்துக்கும், தயை காருண்யத்துக்கும் மனிதர் காண்பிக்கும் நன்றியும் பதில் நேசமுமென்ன? இந்த அதி அற்புத தேவதிரவிய அனுமானத்தை உண்டாக்கின நாள் முதல் இதுவரையில் செய்யப்பட்டதும், இனி உலக முடிவு வரையில் செய்யப்படுவதுமான சகல அனாசாரங்களையும் அக்கிரமங்களையும் எடுத்துக்கூறுவதென்றால், ஆயிரம் நாவுகள் இருந்தபோதிலும் போதாது.

திவ்விய சற்பிரசாதத்தை உண்டாக்கின நாளிலேயே கன்னெஞ்சனான யூதாஸ் இஸ்கரியோத் தேவதுரோகமாய் திவ்விய நன்மை வாங்கினானென்று சில வேதசாஸ்திரிகள் உரைத்திருக்கிறார்கள். அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில், அக்காலத்தில் திவ்விய நன்மை வாங்கினவர்கள் காண்பித்த சில அவசங்கைகளைப்பற்றிக் கண்டித்துப் பேசுகிறார்.

வேதகலாபனைகள் நடந்தேறியபோது, வேதவிரோதிகள் சுரூபங்களையும் பீடங்களையும் தகர்த்து தள்ளினதுமன்றி, கிறீஸ்துவர்கள் பூச்சியமாய் வணங்கிவந்த திவ்விய சற்பிரசாதம் தங்கள் கையில் விழுந்தபோது, என்ன அக்கிரம பாதகங்கள் கட்டிக்கொண்டார்களென்று வரைய கை கூசுகின்றது.

முற்காலத்தைப்பற்றிப் பேசுவானேன்? தற்காலம் நம்மைச்சுற்றி என்ன பார்க்கிறோம்? எத்தனையோ இலட்சக்கணக்கான பேருக்கு, திவ்விய நற்கருணையில் அவர்களுடைய சிருஷ்டிகரும் கர்த்தருமான சேசுநாதர் எழுந்தருளியிருப்பது சிறிதும் தெரியாது. ஆகிலும் அவர்களுக்காகவுந்தானே, அவர் தமது திரு இரத்தத்தைச்



சிந்தி, திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார். அஞ்ஞானிகளும் மகம்மதியரும் தமது தேவாலயத்தின் பக்கத்தில் தம்மை சட்டைபண்ணாது செல்லுகையில், அவருடைய நேச இருதயத்துக்கு இது எவ்வளவோ துக்கத்தை உண்டாக்குகின்றது! இவர்களாகிலும் திவ்விய நற்கருணையைப்பற்றி சிறிதும் அறியாததால் இப்படி நடக்கிறார்கள்; ஆனால் திவ்விய நற்கருணை உண்டாக்கப்பட்டதை அறிந்திருக்கும் பதிதர், "இதுதான் என் சரீரம்" என்னும் தெளிவான வார்த்தைகளின் அர்த்தத்தைக் குழப்ப முயன்று, திவ்விய சற்பிரசாதத்தில் தமது சொற்படி எழுந்தருளி வர சேசுநாதர்சுவாமிக்கு வல்லமை இல்லாததுபோலவும், அப்பேர்ப்பட்ட புதுமை செய்ய அவருக்கு நமது மட்டில் சிநேகமில்லாதது போலவும், பற்பல அபத்தங்களையும் அபதூறுகளையும் பிதற்றுவது, சேசுவின் திரு இருதயத்துக்கு இன்னம் அதிகமான வருத்தத்தை வருவிக்கின்றது.

ஆனால் சத்திய திருச்சபையின் பிள்ளைகளாயிருக்கும் பாக்கியம் பெற்று, திவ்விய நற்கருணையில் நமதாண்டவர் வீற்றிருப்பதை விசுவசிக்கும் கத்தோலிக்கர்களாகினும், அவருடைய இருதயத்தை நோகப்பண்ணாதிருக்கிறார்களோ? ஐயோ! விசுவசித்தும் விசுவசியாதவர்களைப்போல் நடக்கிறவர்கள் எத்தனைபேர்! முன்னே சில அற்ப வெள்ளிக் காசுகளுக்காக தன் ஆண்டவரை யூதாஸ் காட்டிக்கொடுத்ததுபோல், இக்காலத்திலும் முகத்தாட்சண்ணியத்துக்காகவும், பற்பல இலௌகீக முகாந்தரங்களுக்காகவும், சாவானபாவத்தோடு மனங்கூசாமல் திவ்விய நன்மை வாங்கும் யூதாஸ்கள் பலரில்லையோ? கோவிலுக்கு ஆராதிக்கச்சென்று, அங்கே கட்டிக்கொள்ளும் தகாத பார்வை மரியாதையில்லாத நடத்தை முதலிய

வைகளால், குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டவர்களைப்போல் திரும்பி வருவாரில்லையோ? கூத்து நாடகம் வேடிக்கையென்றால் கூட்டமாய் ஓடுகிறவர்களில் எத்தனை பேர், அவர்களுக்காக இரவும் பகலும் கைதிபோல் காத்திருக்கும் அநேக தேவனை சந்திக்கச் செல்லுகிறார்கள்? பூசை நேரத்திலும், திவ்விய நற்கருணை சந்திக்கும்போதும், எவ்வளவு வணக்கக் குறைச்சல், எவ்வளவு பராக்குகள்! திவ்விய நன்மை வாங்குமுன்னும், வாங்கிய பிறகும், எவ்வளவு அசட்டைத்தனம்! சாதாரண கிறீஸ்துவர்கள் மாத்திரமல்ல, திரு இருதயத்தின் நேசத்துக்குத் தங்களைத் தானே முழுதும் ஒப்புக்கொடுத்து விட்டவர்கள் முதலாய் எத்தனையோ அவசங்கைகளுக்குக் காரணமாகி திரு இருதயத்துக்கு சொல்லொண்ணா வியாகுலம் வருவிக்கிறார்கள்!

இந்தக் கணக்கற்ற நிந்தை அவமான துரோகங்களால் நொந்து வருந்தும் திரு இருதயம் முத். மார்க்கரீத்து மரியம்மாளுக்குப் பரிதாபத்துடன் சொல்லும் வார்த்தையைக் கேள்: "இதோ இந்த இருதயம் மனிதர்மேல் எவ்வளவு நேசம் கொண்டிருக்கிறதென்றால், அவர்களுக்குத் தன் நேசத்தைக் காண்பிக்கும்படி தன்னைத்தானே முழுவதும் செலவழிக்க சிறிதும் பின்தாங்கவில்லை; இதற்குப் பதில் நன்றியாக, இந்த சிநேக தேவதிரவிய அனுமானத்தில் பெரும்பான்மையோரான மனிதரிடமிருந்து நான் அடைவது, நன்றிகெட்டதனமும், நிந்தை அவமானங்களும், தேவதுரோகங்களும், அசட்டைத்தனமும், வெறுப்புமே. ஆனால் எனக்கு இன்னும் அதிக வருத்தத்தை உண்டுபண்ணுவது யாதெனில், தங்களைத் தானே முழுவதும் எனக்கு ஒப்புக்கொடுத்த இருதயங்களே இப்படி நடக்கின்றதென்பதே."



தம்பி, திரு இருதயத்திலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் அம்புபோல் உன்னிருதயத்தில் பாய்கின்றதா? வழியில் போகும் சகல மனிதரும் கூடி ஓர் மனிதனை நிந்தித்துப் பழித்து மானபங்கப்படுத்துவதைக் கண்டால், அவன் பரதேசியானபோதிலும் உன்னிருதயத்தில் இரக்கம் பரிதாபம் உண்டாகாதிருக்குமா? அவன் உன் தந்தையானால், கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பாயா? இவ்வளவு நிஷ்டூரமாய் முதலாய் நடத்த வேண்டியதில்லை. உன் தாய் தந்தை சகோதரர் சகோதரிகளை யாதொருவன் மரியாதைக் குறைவாகப்பேசினால், அல்லது அவர்கள் உருவம் பதிந்துள்ள போட்டோ படங்கள் முதலியவைகளைக் காறித் துப்பி காலால் மிதிக்கத்துணிந்தால், உன் இருதயம் பதைத்துத் துடிக்குமல்லவா?

இதோ பார். இவ்வளவு அவமான நிந்தைகளை அனுபவிப்பது யார்? சேசுநாதர்சுவாமி உனக்கு முகமறியாத ஓர் அன்னியனா? உன் பிராண சிநேகிதரல்லவா? உன் பேருபகாரியல்லவா? உன் பூலோக தந்தையைவிட ஆயிரம் கோடி மடங்கு உன்னை அதிகமாய் நேசிக்கும் உத்தம தந்தையல்லவா? உன்னை உண்டாக்கி இரட்சித்துப் பரிபாலித்து வரும் உன் தேவனல்லவா?

மேலும் இவ்வளவு துன்பவருத்தங்களுக்கு அவர் தம்மையுள்ளாக்கிக்கொண்டது எதுக்காக? உன் பேரில் வைத்த தயை நேசத்தினாலல்லவா? இவ்வளவு அவமான துரோகங்களைச் சகிக்கவேண்டுமென்று, திவ்விய சற்பிரசாதத்தை உண்டாக்குவதற்கு முன்னதாகவே, நித்திய ஞானமாகிய அவர் தெளிவாயும் நுணுநுணுக்கமாயும் அறிந்திருந்தபோதிலும், உன் பக்கத்தில் ஜீவித்து, உன் துயரங்களில் உன்னைத் தேற்றி, உன் சோதனைகளில்

உன்னைத் திடப்படுத்தி, உன்னுடன் ஞான ஐக்கியமாக வேண்டுமென்கிற ஆவலால், இத்தனை அவமான நிந்தைகளையும் சட்டைபண்ணாமல் திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார். தன் நலம் பாராத தூய சிநேகம் நிறைந்த இந்த திரு இருதயத்துக்கு உன் ஆயுள்கால முழுவதும் பரிகார முயற்சிகள் செய்து ஒப்புக்கொடுப்பது உன் கடமையன்றோ?

மற்றவர்களுடைய குற்றங்குறைகளைப் பரிகாரம் செய்வதைப்பற்றிமாத்திரம் பேசுவானேன்? நீயே எத்தனை முறை அந்தத் திரு இருதயத்தைக் குத்தி திறந்தாய்! திவ்விய சற்பிரசாதத்துக்கு நீ காட்டியுள்ள அவசங்கை அசட்டைத்தனத்துக்கெல்லாம் பரிகாரம் செய்ய வேண்டாமா? உன் பாவங்களையும் குற்றங்குறைகளையும் நினைத்து வெட்கித் துக்கப்படு.

திரு இருதயம், மேலே சொன்னபிரகாரம், மனிதருடைய நன்றிகெட்டதனத்தைப் பற்றி, முத். மார்க்கரீத் மரியம்மாளிடம் பட்சத்துடன் முறையிட்டபிறகு, "இதற்காக, திவ்வியநற்கருணைத் திருநாளின் எட்டாம் நாளுக்குப்பின் வரும் முதல் வெள்ளிக்கிழமையில் எனது திரு இருதயத்தைக் குறித்து விசேஷித்த திருநாள் கொண்டாடி, அன்றையத்தினம் திவ்விய நன்மை வாங்கி, பரிகார முயற்சி செய்து ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று திருவுளம்பற்றியது. திருச்சபையானது இந்தத் திருநாளை வருஷாவருஷம் ஆரவாரச் சிறப்புடன் கொண்டாடிவருகிறது. அந்த திருநாள் திரு இருதயமே கேட்டுக்கொண்ட திருநாளாதலால், அதைத்தக்க பத்தியுடன் கொண்டாட உன்னாலான உதவி செய்வதுமன்றி, அன்றையத்தினம் பரிகார நன்மை வாங்கி பரிகார முயற்சிகள் செய்து ஒப்புக்கொடு.



வருஷத்தில் வரும் இந்த ஒருநாளை மாத்திரமல்ல, ஒவ்வொரு மாதத்தின் தலை வெள்ளிக்கிழமையையும் கூடுமானால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும், திரு இருதயத்துக்குரிய விசேஷ நாளாகக் குறித்துக்கொண்டு, பரிகார நன்மை வாங்கி, பரிகார ஜெபங்கள் சொல்லி ஒப்புக்கொடு. பரிகாரநன்மை வாங்கும் நாட்களில், மற்ற நாட்களைவிட அதிக பத்தியுருக்கத்துடன் ஆயத்தம் செய்து, நன்றியறிந்த தோத்திரம் செலுத்தவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

ஜெபங்கள், திவ்விய நன்மைகளைப் பரிகாரமாக ஒப்புக்கொடுப்பதுமன்றி, பற்பல தபசு முயற்சிகளையும் இக்கருத்துக்காக செய்வது நமது ஆண்டவருக்கு வெகு ஆறுதலை வருவிக்கும். உனக்கு வரும் துன்ப வருத்தங்களை உன் பாவங்களுக்காகவும் பிறர் பாவங்களுக்காகவும் பொறுமையுடன் சகித்து ஒப்புக்கொடுத்தால், இதுவும் மகா நேர்த்தியான பரிகார முயற்சியாகும்.

ஆனால் பரிகாரம் செய்பவனிடத்தில் விளங்கவேண்டிய முக்கியமான இலக்ஷணமென்னவெனில், பரிகரிக்க வேண்டிய பாவங்களைத் தன் சொந்த குற்றங்குறைகளால் அதிகரிக்காதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்? இல்லாவிடில், ஒரு கையால் காயத்தை ஆற்றி, மற்றொரு கையால் திரு இருதயத்தைக் குத்தி திறப்பதுபோலாகும். ஆதலால் திவ்விய சற்பிரசாதத்தின் முன் இருக்கையில், உன்னிடத்தில் தோன்றும் அடக்க ஒடுக்கமென்ன, கவனம், பத்தியுருக்கமென்ன? எவ்வளவு பத்தியுடன் பூசை காண்கிறாய்? உன்னிடம் திவ்விய நற்கருணை சந்திக்க ஆவலுண்டா? சந்திக்கும்போது வீண் பராக்குகளுக்கு மனம் பொருந்தி இடங்கொடுக்கிறாயா? சம்மனசுக்களின் போஜனத்தை உட்கொள்ளுமுன் நீ செய்

யும் ஆயத்தம் யாது? உட்கொண்டபின் செலுத்தும் நன்றியறிந்த தோத்திரம் யாது? என்று இவைமுதலியவைகளைப் பற்றி உன்னைத்தானே அடிக்கடி சோதித்து, நாளுக்குநாள் இக்குறைகளை நீக்கப் பிரயாசைப்படவேண்டும். கோவில் விஷயங்களை விசாரிக்கும்படி அல்லது மேல் பார்க்கும்படி உன்னைக் குறித்திருந்தால், திவ்விய ஆண்டவரின் வாசஸ்தலம் சுத்தமாயும் அதிலுள்ள சகலமும் ஒழுங்காயுமிருக்கும்படி பார்த்துக்கொள்.

கடைசியாய், பிறரையும் தலைவெள்ளிக்கிழமை முதலிய நாட்களைப் பரிகார நாட்களாக அநுசரிக்கும்படி தூண்டுவாயாகில் திரு இருதயத்துக்கு அவர்கள் வருவிக்கக்கூடிய அவசங்கைகளைக் குறைத்து, திரு இருதயத்துக்கு ஆறுதல் உண்டாக்கும் சிநேகிதர்களை அதிகரிப்பாய்.

---

## 3-ம் அதிகாரம்.

## ஆராதிப்போன்.

சர்வேசுரன் நமது சிருஷ்டிகராதலால், அவருடைய மட்டற்ற மேன்மையையும் அவருக்கு நமதுபேரிலுள்ள பூரண அதிகாரத்தையும் அங்கீகரித்துக்கொண்டு அவருக்கு தேவ ஆராதனை சமர்ப்பிப்பது நமது முதற் கடமை. சம்மனசுகளும் அர்ச்சியசிஷ்டவர்களும் மோட்சத்தின் பிரபுக்களாயும் நமக்காக சர்வேசுரனிடம் பரிந்துபேசக்கூடியவர்களாயுமிருப்பதினால், அவர்களை வணங்குவது நியாயமே. அர்ச். கன்னிமரியம்மாள் சர்வேசுரனுடைய மாதாவும் மோட்சத்துக்கு இராக்கினியுமாயிருப்பதினிமித்தம், மற்ற மோட்சவாசிகளுக்குச் செலுத்துவதைக்காட்டிலும் தேவதாய்க்கு மேலான வணக்கம் செலுத்துகிறோம்.



ஆனால் தேவதாயும் மற்ற மோக்ஷவாசிகளும் சிருஷ்டிகளே, இதினால் அவர்களுக்கு நாம் ஒருபோதும் தேவ ஆராதனை செலுத்துவதில்லை. தேவ ஆராதனை சர்வேசுரன் ஒருவருக்கு மாத்திரமுரியது.

சர்வேசுரனுக்கு தேவ ஆராதனை சமர்ப்பிக்கவேண்டுமென்பது மெய்யே. ஆனால் சர்வேசுரனார், நானார்? அவருக்கும் எனக்கும் எவ்வளவு பாரதூர வித்தியாசம்! அற்பப் புழுவாகிய நான், அளவற்ற மகிமைப்பிரதாபம் பொருந்திய சாக்ஷாத் கடவுளுக்கேற்ற ஆராதனை செய்யக்கூடுமா?

சகோதரமே, பயப்படாதே. நீ நேர்மையான மனதுடன் செலுத்தும் ஆராதனை சர்வேசுரனுக்கு உகந்ததாயிருக்கிறது. மேலும் உன் ஆராதனை முயற்சியை நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பரம பிதாவுக்குச் செலுத்தும் ஆராதனைகளுடன் சேர்த்து ஒப்புக்கொடு. இந்த ஆராதனைகள் அளவற்ற பேறுபலனுள்ளதாயிருப்பதினால், உன் ஆராதனை முயற்சிகளும் சர்வேசுரனுக்கு மகா பிரியமானதாயிருக்கும்.

அதென்ன, சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி சர்வேசுரனல்லவா? அவர் எப்படி மற்றொருவரை ஆராதிக்கக் கூடுமென்பாயோ? விவரிக்கிறோம், கேள்.

திரித்துவத்தின் மூன்றாட்களும் ஒருவருக்கொருவர் சமானமாயிருப்பதால், அவர்கள் ஒருவர் ஒருவரை ஆராதிப்பதில்லை. ஆனால் சுதனாகிய சர்வேசுரன் நமதுபேரில் வைத்த அணைகடந்த அன்பினால் மனுஷாவதாரமானார். இதினால் சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி மெய்யான சர்வேசுரனாயிருப்பதுமன்றி, மெய்யான மனுஷனுமாயிருக்கிறார். அவருடைய மனுஷீகம் மெய்யாகவே சிருஷ்டிக்கப்பட்

டது. இதினிமித்தம் சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி மனுஷனாகியமட்டும் நித்தியபிதாவுக்கு ஆராதனை செலுத்தக்கூடியவராயிருக்கிறார். அப்படியே, தமது சீவியகாலத்திலே, தேவாலயத்துக்கு ஆராதிக்கச் சென்றாரென்றும், வனாந்தரத்திலும், பூங்காவனத்திலுங், மலை உச்சியிலும் சென்று ஜெபம் செய்தாரென்றும் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம்.

சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி இந்த சமயங்களில் மாத்திரமல்ல, தமது சீவியகால முழுவதும் இடைவிடாமல் தேவ ஆராதனை செலுத்திவந்தார். அவர் மனுஷாவதாரமான முதற் க்ஷணத்திலேயே, சர்வேசுரனை நாம் மோக்ஷத்தில் பார்த்தறியப்போகிறதுபோல், முகமுகமாய்த் தரிசிக்கும் வரம் அடைந்திருந்தார். சர்வேசுரனை இடைவிடாமல் தரிசித்து வந்ததால், இடைவிடாமல் ஆராதித்தும் வந்தார். கன்னிமரியாயின் உதரத்திலிருக்கும்போதும், பெத்லகேமிலும், எஜிப்திலும், நசரேத்தில் அர்ச். சூசையப்பர் தச்சுப்பட்டறையிலும், மூன்று வருஷம் பிரசங்கம்செய்து போதித்து வந்தபோதும், கானாவில் புதுமை செய்தபோதும், சிலுவை மரத்தில் தொங்கினபோதும், எவ்விடத்திலும் எந்நேரத்திலும் இரவும் பகலும் சர்வேசுரனை இடையறாது ஆராதித்துவந்தார்.

அவர் சீவியகாலத்தோடு இவ்வாராதனை முயற்சிகள் முடிந்துபோகவில்லை. மோட்சத்தில் பிதாவாகிய சர்வேசுரன் வலதுபாரிசத்திலிருந்தும், பூலோகத்தில் கணக்கற்ற தேவாலயங்களிலுள்ள திவ்விய நற்கருணையிலிருந்தும் தேவ ஆராதனை செலுத்திக்கொண்டு வருகிறார்.

இந்த ஆராதனை முயற்சிகளைச் செய்பவர், பிதாவுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும் சரிசமானமானவராதலின், இந்த முயற்சிகள் அளவற்ற பேறுபலன்களுள்ளவை



களாய், மட்டற்ற மகிமைப்பிரதாபம் பொருந்திய சர்வேசுரனுக்குரிய ஆராதனையைப் பூரணமாய்ச் செலுத்துகின்றன.

* * * *

தம்பி, ஆராதிப்போனின் அலுவல் உனக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாய் திவ்விய சற்பிரசாதத்தில் எழுந்தருளியிருக்கும் சிநேக தேவனின் திரு இருதயத்தை ஆராதிப்பது உன் கடமையாகும்.

திவ்விய பாலகன் பிறந்தபோது, தேவதாயும் அர்ச். சூசையப்பரும், சம்மனசுகளும் இடையரும், மூன்று ராஜாக்களும், பெத்லகேமிலுள்ள குகையில் ஆராதிப்போரின் அலுவலை நிறைவேற்றினார்கள். அவர் வளர்ந்தபின் அர்ச். ஸ்நாபக அருளப்பரும், அர்ச். இராயப்பரும், சமாரித்தாளும், பிறவிக்குருடனும், மற்றவர்களும் சேசுநாதர்சுவாமி மெய்யாகவே சர்வேசுரனின் குமாரன் என அங்கீகரித்து வணங்கினார்கள். உயிர்த்தபின், அவருடைய காயங்களில் விரலை விட்டுச் சோதித்த அர்ச். தோமையார் என் ஆண்டவரே, என் தேவனே! என்று விசுவாச உச்சாரணம்செய்து ஆராதித்தார். நமதாண்டவரின் சீவிய காலத்தில் அவரைக் கண்டு அவருக்கு சீஷனாயிருக்கும் பாக்கியம் உனக்கும் கிடைத்திருந்தால், எவ்வளவோ உருக்கத்துடன் அவரை ஆராதித்து, அவருக்கு ஊழியஞ் செய்ய ஆசித்திருப்பாய்! இந்தப் பாக்கியம் உனக்கு கிடைக்கவில்லை.

மோட்சத்தில் சர்வேசுரனுடைய சிம்மாசனத்தின் ஜோதிப் பிரகாசத்தைப் பார்க்கக் கண் கூசி, தலைகுனிந்து, “பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்” என்று இடைவிடாமல் ஆராதித்துவரும் கோடாகோடி சம்மனசுகளுடன் சேர்ந்து ஸ்துதிப்பதற்கு இன்னும் உனக்கு காலம் வரவில்லை.

தற்காலம் நீ செய்யக்கூடுமாயிருப்பதென்ன? சேசு
நாதர்சுவாமி அர்ச். தோமையாரை நோக்கி, நீ என்னைக்
கண்டதினாலல்லோ விசுவசித்தாய், காணதிருந்தும் விசுவ
சித்தவர்கள் பாக்கியவான்கள், என்றுரைத்ததை நினைவு
கூர்ந்து, திவ்வியநற்கருணையில் மறைந்து வசிக்கும்
ஆண்டவரை, உனது சரீரக்கண்களால் தரிசிக்கும் பாக்கி
யம் கிடைத்தால், எவ்வளவு உருக்கத்துடன் ஆராதித்து
சங்கிப்பாயோ, அதேபிரகாரம் உயிருள்ள விசுவாசக்
கண்களால் பார்த்து ஆராதிப்பாயாக.

இதுவரையில் திவ்வியநற்கருணைக்குத் தக்க ஆரா
தனை செலுத்தி வந்தோமோ? எத்தனையோ தடவை
திவ்விய சற்பிரசாதத்துக்கு முன் முழங்காற்படியிடாமல்,
திடுதிடென்று, வணக்கக்குறைவாய் குறுக்கே சென்றோம்.
எத்தனையோ தடவை நாம் முழங்காற்படியிட்ட விதம்,
பரிகாச ராசாவுக்கு சேவகர்கள் முழங்காற்படியிட்டதை
ஒத்திருந்தது! தேவாலயத்தில் உட்கார்ந்திருந்தபோ
தும், முழங்காலிலிருந்தபோதும், ஓரிடம் விட்டு மற்றோர்
இடம் சென்றபோதும், திவ்விய சற்பிரசாதத்திலெழுந்
தருளியிருக்கும் சர்வ உன்னத சர்வேசுரனுடைய திவ்விய
சந்நிதானத்துக்குரிய மரியாதையுடன் நடந்தோமா? திவ்
விய பூசையில், திவ்விய நற்கருணை எழுந்தேற்றமானது
முதல் திவ்விய நன்மை உட்கொள்ளும் வரையில், பலிபீட
த்தின்மேல் பிரசன்னராயிருக்கும் திவ்விய ஆண்டவரை
நினைவுகூர்ந்து, அந்த நேரத்தில் விசேஷ பத்தியுடன்
பூசை கண்டோமா? நாம் திவ்வியநன்மை வாங்கும்போது
நம்மிடம் எழுந்தருளிவரும் ஆண்டவரை, பராக்கின்றி
முதல்முதல் ஆராதித்து இந்த ஆசார உபசார முயற்சியு
டன் நமது இருதயத்துக்குள் வரவழைத்தோமா? பழைய
ஏற்பாட்டின் காலத்தில், தமது பெட்டகத்துக்கு வணக்



கக்குறைச்சலாய் நடந்தவர்களை சர்வேசுரன் எவ்வளவோ
பயங்கரமான விதமாய்த் தண்டித்தார்! இப்போது அவ
ருடைய வல்லமை குறைந்து விட்டதா? இல்லை. நமது
பேரில் வைத்த அன்பினால் தயாளமாய் நடக்கிறார். திவ்
விய சற்பிரசாத ஆண்டவர் நமதுபேரில் வைத்த அன்பி
னாலும் தயாளத்தினாலும் நம்மைத் தண்டியாது விடுவ
தைக்கண்டு, அவரை அவமதித்து நடப்பது யோக்கியமா?

மேலும், சர்வேசுரன் சம்மனசுகளுக்குக் கொடாத
ஒரு விசேஷ நன்மையை மனிதருக்கு அளித்திருக்கிறார்.
அது திவ்விய சற்பிரசாதமே. நம்மோடு ஜீவிக்கவேண்டு
மென்கிற ஆசை ஆவலினால், தம்மை முழுவதும் நமக்குக்
கையளித்துவிட்டார். குச்சாயிருந்தாலும் சரி, மாளிகை
யாயிருந்தாலும் சரி, சாதாரணமான மரப்பெட்டியாயிருந்
தாலும் சரி, நேர்த்தியான நவ ரத்னங்களால் இழைக்கப்
பட்ட தங்கப்பெட்டியாயிருந்தாலும் சரி, எவ்விடத்தில்
குருவானவர் திவ்விய நற்கருணையை ஸ்தாபிக்கிறாரோ,
அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கச் சித்தமாயிருக்கிறார்.
இவ்விதம் மனிதர்பேரில் பூரண நம்பிக்கை வைத்து,
தம்மை முழுதும் அவர்களுக்குக் கையளித்திருக்கும்
தெய்வீக விருந்தினரை, அவருடைய தெய்வீக அந்தஸ்
துக்குரிய மேரை மரியாதையோடும் வணக்க ஆராதனை
களோடும் உபசரிப்பது நமது கடமையல்லவா?

ஆதலின் சிநேக தேவதிரவிய அநுமானத்தில் நமக்
காக எழுந்தருளியிருப்பதற்காகவும், அதிலிருந்து இடை
விடாமல் நமக்காக பரம பிதாவை ஆராதித்துக்கொண்
டிருப்பதற்காகவும் திரு இருதயத்துக்கு நன்றியறிந்த
தோத்திரம் செய்து, திவ்விய சற்பிரசாதத்தில் வீற்றிருக்
கும் திரு இருதயத்தை இடைவிடாமல் ஆராதிப்போமாக.
இடைவிடாமல் ஆராதிக்கும்படி நாள் முழுவதும் திவ்விய

சற்பிரசாதத்துக்கு முன்னிருந்து செபஞ்செய்துகொண்டிருப்பது அவசியமில்லை. உன் இதர கடமைகளுக்குத் தடங்கல் உண்டாகாதபடி, உன்னால் கூடிய அளவு, அடிக்கடி பத்தியுடன் திவ்யநற்கருணையைச் சந்தி. கோவிலுக்குப் போகக்கூடாத சமயங்களிலும், திவ்விய சற்பிரசாதமில்லாத ஊர்களில் ஜீவிக்கும்போதும், மனதினலாவது திவ்விய சற்பிரசாதப் பெட்டிக்குமுன் முழங்காலிலிருந்து, ஆராதனை செலுத்து. மேலும், சர்வ வியாபியான சர்வேசுரன் உனக்குத் தூரத்தில் அல்ல, உள்ளும் புறமும் எப்பக்கமும் இருக்கிறாரென்றும், ஞானஸ்நானத்தினால் உன் ஆத்துமம் திரித்துவத்தின் தேவாலயமாகிவிட்டதென்றும், திவ்விய நன்மையினால் அடிக்கடி சேசுநாதர்சுவாமி தமது தெய்வீகத்தோடும் மனுஷீகத்தோடும் உன் இருதயத்தில் எழுந்தருளிவந்து அதை அர்ச்சிக்கிறாரென்றும் நினைத்து, தாயின் கண்காணிப்பில் பிள்ளை சந்தோஷத்துடன் தன் வேலையைச் செய்து முடிப்பது போல், உன் ஆண்டவரின் சந்நிதானத்தில் உன் கிரியைகளையும் கடமைகளையும் நிறைவேற்றி, உன் துன்பதுரிதங்களைப் பொறுமையுடன் அநுபவித்து, சகலத்தையும் திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடு. இவைகளிலுள்ள குற்றங் குறைகளைப் பரிகரித்து, திரு இருதயம் தன் அளவற்ற பேறுபலனுள்ள ஆராதனைகளுடன் இவைகளையும் சேர்த்து நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, உன்னை ஆசீர்வதித்தருளும். மேலும் இவ்வுலகத்தில் ஆராதிப்போனின் அலுவலை சுமுத்திரையாய் நிறைவேற்றினதற்குச் சம்பாவனையாக, நித்தியகாலமாய் சம்மனசுகளுடனும் அர்ச்சியசிஷ்டவர்களுடனும் மோக்ஷத்தில் ஆராதிக்கும் பாக்கியத்தையளித்தருளும்.

---

## 4-ம் அதிகாரம்.

## நேசிப்போன்.

உருக்கமான நேசப்பற்றுதலுள்ளவர்களை சில குறிகளால் தெரிந்துகொள்ளலாம். மெய்யான நேசபாசமுள்ளவர்கள் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரியாமலிருக்க ஆசிப்பார்கள். ஒருவர் ஒருவருக்குத் தங்களை முழுவதும் கையளித்து விடுவார்கள். ஆஸ்திபாஸ்தி, கீர்த்தி, கல்வி முதலியவைகளில் வித்தியாசமிருந்தால், உயர்ந்த அந்தஸ்திலுள்ளவன் தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவனுக்குக் கை கொடுத்து உதவி, தனக்கு சமானமாக்கப் பிரயாசைப்படுவான்.

சர்வேசுரனுக்கு என் பேரில் இப்பேர்ப்பட்ட மெய்யான நேசப்பற்றுதல் இருக்கக்கூடுமா? சுயஞ்சீவியராய், தம்மிலேயே பேரின்ப பாக்கியமுள்ளவராய், பரலோகத்தையும் பூலோகத்தையும் ஆண்டுவரும் இராஜாதி ராஜனுக்கு, இன்றைக்கிருந்து நாளைக்கு மரிக்கும் அற்பப் புழுவாகிய என்னுடைய நேசம் என்னத்திற்கு? அவர் என்னைத் தேடி, என்னைவிட்டுப் பிரியாமலிருக்கும்படி ஆசிப்பதற்கு, என்னிடம் என்ன நன்மையுண்டு? அளவற்ற நன்மைச் சுரூபியாகிய கடவுள், ஒன்றுமில்லாத வஸ்துவாகிய எனக்குத் தம்மைக் கையளிக்கக்கூடுமா? அவர் தம்மை அவ்விதம் கையளித்தபோதிலும், பெற்றுக்கொள்ள எனக்குத் திராணியுண்டா? சிருஷ்டியை எப்படி சிருஷ்டிகர் தமக்கு சமானமாக்கக் கூடும்?

ஆகிலும், தம்பி, மெய்யாகவே சர்வேசுரன் உன்னை நேசிக்கிறார். அவர் உன்னைத் தேடி, உன்னோடு எப்போதுமிருக்க ஆசிக்கிறார். நீ எவ்வளவுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடுமோ அவ்வளவுக்குத் தம்மைத்தாமே உனக்குக் கையளித்து, உன் அந்தஸ்தினின்று உன்னை எவ்வளவுக்கு உயர்த்தக்கூடுமோ அவ்வளவுக்கு உயர்த்த சித்தமாயிருக்கிறார். இதைக்கண்டு பிரமித்து, அர்ச். இராயப்பரைப்போல், "ஆண்டவரே, நான் நீசப்பாவி," இவ்வளவு சிநேகத்துக்கு நான் பாத்திரவானல்ல என்று தாழ்ச்சிமுயற்சி செய்வாயாக.

நம்மைச் சுற்றியுள்ள அஞ்ஞானிகள், கடவுளுடைய அன்பை அறியாதவர்களாய், அவர் தங்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாதபடி, பயத்துடன் ஆராதித்து வருகிறார்கள். இதினால்தான், எந்த தேவர் தேவதைகள் தங்களுக்கு அதிக பொல்லாப்பு வருவிக்கக்கூடுமென்று பயப்படுகிறார்களோ, அவர்களை அதிகமாய் பூஜித்து வணங்கி வருகிறார்கள். சத்திய வேதத்திலோ, சிநேகத்துடன் வணங்கி, ஊழியஞ் செய்து வருகிறோம். புதிய ஏற்பாடு சிநேகத்தின் ஏற்பாடு. அதிலும் திரு இருதயப் பத்தியானது, அளவில்லாத சிநேகத்துடன் நம்மை நேசிக்கும் சர்வேசுரனுக்கு, நமது முழு இருதயத்தையும் ஒப்புக்கொடுக்கும் பத்தியாகும்.

சர்வேசுரன் நமதுபேரில் வைத்த நேசத்தால் நம்மை விட்டுப் பிரியாமலிருக்க விரும்புகிறார். அவர் சர்வ வியாபியானதால், நம்முடன் எங்குமிருக்கிறார். ஆகிலும் இது போதாதென்று, மெய்யான சரீரத்துடன் மனிதர் மத்தியில் ஜீவிக்கும்பொருட்டு, சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதாரமானார். தமக்குப்பிறகு ஜீவிக்கவேண்டிய மனிதர்களையும் விட்டுப் பிரியாமல் எப்போதும் நம்முடன் வசிக்கும்படி, திவ்விய நற்கருணையை உண்டாக்கியருளினார். என்ன அன்பு! என்ன தயை! மனுமக்களுடன் ஜீவிப்பதே தமக்குப் பேரானந்தமென்றுரைக்கிறார்.



நம்மை விட்டுப் பிரியாதிருக்க ஆசிப்பதுமன்றி, தம்மையும் தமக்குச் சொந்தமானவைகளையும் நமக்குக் கையளித்து விட்டார். அவருடைய புண்ணிய ஜீவியமே நமக்கு திவ்விய மாதிரிகை, அவருடைய அளவற்ற பேறுபலன்களே நமது ஆஸ்திபாஸ்தி, அவருடைய திருப்பாடுகள் நமக்குத் தேற்றரவு, அவருடைய திருச் சரீரம் நமது உன்னதபோஜனம், அவருடைய திரு இரத்தம் நமது சிறந்த பானம், அவர் வீற்றிருக்கும் மோட்சமே நமக்கு சொந்த வீடு, அவருடைய தெய்வீகமே நாம் நித்தியகாலம் தரிசித்து சுகிக்கப்போகும் பேரின்ப பாக்கியம். சேசுவின் திரு இருதயம் இதைக்காட்டிலும் நமக்குச் செய்யக்கூடியது ஏதாகிலுமுண்டா? இன்னம் அது நமக்குக் கையளிக்காதது யாது?

மெய்யான சிநேகம் நேசர்களைச் சமானமாக்கப் பிரயாசப்படுகிறது. சிருஷ்டியை சிருஷ்டிகருக்கு சமமாக்குவது கூடாததினிமித்தம், சிருஷ்டிகரோ சிருஷ்டியாக அவதரித்துப் பிறந்து, பாவம் நீங்கலாக, மற்ற சகலத்திலும் மனிதரைப்போல் கஷ்ட நிர்ப்பந்தங்களை அனுபவித்து ஜீவிக்கத்திருவுளமானார். மேலும் இஷ்டப்பிரசாதத்தினால் மனிதனுக்கு தெய்வீக ஜீவியம் அளித்து, அவனைத் தமது சுவீகாரப் பிள்ளையாக்கி, சுபாவ அந்தஸ்திலிருந்து மனிதனை மேலான அந்தஸ்துக்கு உயர்த்தியருளுகிறார்.

திவ்விய ஆண்டவரின் நேசத்தை இன்னம் அதிகமாய் அறியவேண்டுமா? சிநேக தேவதிரவிய அநுமானத்தில் அவர் பிரசன்னமாயிருப்பதையும், அதில் தம்மைத்

தாமே நமக்கு முழுவதும் கையளித்திருப்பதையும் நுணு நுணுக்கமாய் ஆராய்ந்து பார்.

சேசுநாதர்சுவாமி திவ்விய நற்கருணையை உண்டாக்கினபோது, உலகத்தில் உரோமாபுரி என்னும் ஒரே ஒரு இடத்தில் அர்ச். பாப்பானவர் மாத்திரம் திவ்வியவசீகர வார்த்தைகள் சொல்லி தம்மை எழுந்தருளிவரச் செய்யக் கூடுமென்று ஒழுங்கு செய்திருக்கலாம். அவ்விதம் ஏற்பாடு செய்திருந்தால், நமதாஸ்திபாஸ்தியைச் செலவிட்டு, உரோமை நகருக்குப் போய், ஒரே ஒரு முறை திவ்விய நற்கருணையை அர்ச். பாப்பானவர் கையினின்று உட்கொண்டோமானால், அதுவே பெரிய பாக்கியம், அதற்குப்பின் மரித்தால், நம்மைப்போல் அதிர்ஷ்டசாலிகளில்லை என்று எண்ணியிருப்போம். மேலும் அப்படி ஒழுங்கு செய்திருந்தால் திவ்விய நற்கருணைக்கு சாஷ்டாங்க தண்டனிட்டு மனிதர் எவ்வளவோ ஆராதனை செய்து, சகல அனுசாரங்களையும் நீக்கி நடந்திருப்பார்கள். ஆனால், சேசுவின் திரு இருதயத்தின் மனத்தாராளத்துக்கும் அளவற்ற நேசத்துக்கும் இது போதுமானதாகத் தோன்றவில்லை. உலகத்தின் நாற்றிசையிலுள்ள பட்டணங்களிலும் கிராமங்களிலும் வாழும் தன் மக்கள் மத்தியில் எப்போதும் குடிகொண்டிருந்து, அடிக்கடி அவர்களைத் தரிசித்து, அவர்களுக்குப் போஜனமாகி, சகல கஷ்ட நஷ்டங்களிலும் அவர்கள் பக்கத்திலிருந்து உதவிபுரிய ஆசித்ததால், சிலர் தன் நன்கொடையை நன்கு மதியாமல் அனுசாரமாய் நடப்பார்களென்று நன்றாய் அறிந்திருந்தபோதிலும், அதைச் சட்டைபண்ணாமல், திவ்விய வசீகர வார்த்தைகளைச் சொல்லும் அதிகாரத்தை சகல குருக்களுக்கும் அளிக்க திருவுளமானார்.



திவ்விய சற்பிரசாதத்தில் நேச ஆண்டவர் நமக்கு அளித்திருப்பதென்ன? தமது திருச்சரீரத்தையும் திரு ஆத்துமத்தையும், மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் அளித்திருக்கிறார். தேவசுபாவம், பிதா சுதன் இஸ்பிரீத்து சாந்துவென்னும் மூன்றாட்களுக்கும் ஒன்றேயாதலால், திவ்விய சற்பிரசாதத்தில் அர்ச். தமதிரித்துவமும் எழுந்தருளியிருக்கின்றது. மோட்சவாசிகள் சர்வேசுரனைக்கொண்டிருப்பதுபோலவே, நாமும் திவ்விய நன்மை வாங்கினபின் சர்வேசுரனைக் கொண்டிருக்கிறோம். அவர்கள் முக முகமாய்த் தரிசிக்கிறார்கள். நாமோ கண்ணால் காணாமல் விசுவசிக்கிறோம். நாமும் நமது இருதயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவரை முகமுகமாய் தரிசிக்கக் கூடுமானால், அதுவே மோட்ச பேரின்ப பாக்கியமாகிவிடும். ஆதலால் திவ்விய சற்பிரசாதம் எவ்வளவோ உன்னத நன்கொடை!

இந்த நன்கொடை நமக்கு முழுவதும் இலவசமாக அளிக்கப்பட்டிருக்கிறது. நீசப்பாவிகளாகிய நாம் இப்பேர்ப்பட்ட சகாயத்தை அடைய என்ன நன்மை செய்தோம்? என்ன செய்திருக்கக்கூடும்? ஆ! சேசுநாதர் சுவாமி திவ்விய நற்கருணையை உண்டாக்கியிராவிட்டால், இந்த அரிய பெரிய சகாயத்தைக் கேட்க, நமக்கு நினைவும் வந்திராது, நாவுமெழாது.

திவ்வியநற்கருணையை உண்டாக்கின சமயமே நமதாண்டவரின் அன்பைத் தெளிவாய் துலங்கும்படி செய்கின்றது. மரணநேரம் ஓர் முக்கியமான நேரம். மரிக்கும் தருணத்தில் தாய் தந்தையர் சொல்லும் வார்த்தைகளும், செய்யும் நன்கொடைகளும், எப்போதும் பிள்ளைகள் மனதில் விசேஷ பட்சத்தையுண்டாக்கும். நமதாண்

டவரும் மரிக்குமுன்தான், திவ்விய நற்கருணையை ஸ்தாபித்து, தாம் விட்டுச் செல்லும் அநாதப் பிள்ளைகளுக்கு இதை ஆறுதலான நன்கொடையாக அளித்தார்.

இவ்விதம் அளவுகடந்த விதமாய் நேசித்திருக்கும் திரு இருதயத்தின் சிநேகத்துக்கு இணையான சிநேகம் வேறுண்டா? திரு இருதயத்தைப்போல் மனத்தாராளமாய் நன்கொடைகளை உனக்கு அளித்தவர்களார்? திரு இருதயத்தைப்போல், உனக்கு நன்மை செய்வதினால் நேரிட்ட அவமான துன்பங்களை பொறுமையுடன் சகித்தவர்களார்? திரு இருதயத்தைப்போல், தன் நலம் மறந்து உன் நன்மையைமாத்திரம் தேடினவர்களார்? இன்னம் உன் மனம் இளக வில்லையா? அஞ்ஞானியொருவன், நீ அறிந்திருப்பதுபோல, உன் தேவனின் அளவுகடந்த நேசப் பெருக்கத்தைக் கண்டுணர்வானாகில், உன் நன்றி கெட்டதனத்தைப்பற்றி அதிசயித்து, உடனே தீவரித்து, திவ்விய சற்பிரசாதத்துக்கு முன் சாஷ்டாங்க தண்டனிட்டு, இவ்வளவு நல்ல தேவனை தான் இதுமட்டும் அறியாதிருந்ததற்குப் பொறுத்தல் கேட்டு, தன் முழு இருதயத்தையும், அதைப்போல் ஆயிரம் இருதயங்கள் கொண்டிருந்தானாகில் அவைகளையும், ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்துவிடுவானென்பதற்குச் சந்தேகமில்லை.

திரு இருதயம் உனக்குச் செய்திருக்கும் உன்னத சகாயங்களுக்காகவும், முக்கியமாய் இவ்வுபகாரங்களைப் புரியும்படி அதை தூண்டியெழுப்பிய அளவற்ற நேசத்துக்காகவும் நன்றியறிதல் செலுத்தி, இதுவரையில் திரு இருதயத்துக்கு உன் முழு நேசத்தையும் அளிக்காததற்குப் பொறுத்தல் கேட்டு, இதுமுதல் உன் முழு இருதயத்தையும் அதற்கு ஒப்புக்கொடு. விசேஷமாய் இம்மாத முழுவ-



தும் திரு இருதயத்தைச் சிநேகிப்பதே உன் அலுவலாயிருக்கக்கடவது.

திரு இருதயத்தை முழு இருதயத்துடன் நேசிக்க வேண்டுமென்றால், வேறு ஒருவரையும் நேசியாமல் மற்ற சகலரையும் பகைக்கவேண்டுமென்பதல்ல கருத்து. சர்வேசுரன் நமக்கு கொடுத்த நேச தாய் தந்தையர், உறவினர், சிநேகிதர், உபகாரிகளை நாம் சிநேகிப்பது கிரமமே. ஆனால் அவர்கள் பேரிலுள்ள சிநேகம் ஆண்டவருடைய ஊழியத்துக்குத் தடையாயிருக்கும்படி நேரிட்டால், அல்லது சிலருடன் சிநேகமாயிருப்பது பாவத்துக்கு வழியானால், அச்சமயங்களில் சர்வேசுரனுடைய சிநேகத்தையே சிரேஷ்டமாகக்கொண்டு, முகதாட்சண்ணியத்தை நீக்கி நடக்கவேண்டும். இவ்விதமே, ஆஸ்திபாஸ்திகளின்மேலுள்ள பேராசை, முதலிய பற்பல ஆசாபாசங்களை நமது இருதயத்திலிருந்து வேருடன் களைந்தெறிந்து, நாளுக்குநாள் தூய தேவசிநேகத்தில் விர்த்தியடையப் பிரயாசப்படவேண்டும்.

மெய்யான நேசபாசமுள்ளவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாமலிருக்க ஆசித்து, ஒருவர் ஒருவருக்குத் தங்களை முழுவதும் கையளித்துவிடுவது வழக்கம். சர்வேசுரனைவிட்டுப் பிரியாமலிருக்க, நம்மிடமுள்ள ஆசை எப்பேர்ப்பட்டது? அவர் எங்கும் பிரசன்னமாயிருக்கிறார். சகல சிருஷ்டிகளும் அவரை நமக்கு நினைப்பூட்டுகின்றன. ஆகிலும் அவரைப்பற்றி அடிக்கடி நினைத்து, அவரை நோக்கி அடிக்கடி சிநேகமுயற்சிகள் செய்து, அவருடன் ஒன்றிக்கிறோமோ? திவ்விய நற்கருணையில் பிரசன்னராயிருக்கும் ஆண்டவர் முன்னிலையிலிருப்பது நமக்கு இன்பமாயிருக்கிறதோ? திவ்விய நன்மையின்

மூலமாயும், அது கூடாதபோது, ஆசைதன்மையின் மூலமாயும் திவ்விய ஆண்டவரை நமது இருதயத்தில் பிரசன்னராயிருக்கச் செய்கிறோமோ?

திரு இருதயத்துக்கு நம்மைத்தானே கையளித்துவிடவேண்டும். திரு இருதயத்தினிடமிருந்து நான் பெறுதது என்ன உண்டு? என் சரீரமும் அதின் ஐம்புலன்களும், என் ஆத்துமமும் அதின் தத்துவங்களும், எனக்குச்சொந்தமான சகலமும் திவ்விய ஆண்டவரிடமிருந்து நான் பெற்றுக்கொண்டதே என்பாயோ? மெய்தான். அவர் நமக்கு அளித்தவைகளையே நேசத்துடன் அவருக்கு நாம் திரும்ப அளிக்கவேண்டுமென ஆசிக்கிறார். ஆதலால் உன்னை முழுதும் திரு இருதயத்துக்குப் பத்தியுடன் நேர்ந்துகொள். திரு இருதயமானது தன்னை நாம் சினேகிக்கவேண்டுமென விரும்புவதுமல்லாமல், அதைக் குறித்து மற்றவர்களையும் பிறர்சினேகத்துடன் நேசிக்கவேண்டுமென்று ஆசிக்கிறது. மனிதரில் மகா அற்பர்களானவர்களுக்குச் செய்த உதவியை முதலாய், திவ்விய ஆண்டவர் தமக்கே செய்யப்பட்டதென மதித்து வெகுமதியளிக்கப்போகிறதாக உரைத்திருக்கிறார். ஆதலின், திரு இருதயத்தை நமது முழு இருதயத்தோடும், சத்துவத்தோடும் நேசிப்பதுமன்றி, அத்திவ்விய இருதயத்தைக்குறித்து சகல மனிதரையும் உத்தம பிறர் சினேகத்துடன் நேசிப்போமாக.

---

## 5-ம் அதிகாரம்.

## சீஷன்.

ஞானத்தைப் புகட்டும் ஆசிரியனை குரு என்றும், குருவை அண்டி, அவர் புகட்டும் ஞானத்தைக் கைக்கொண்டு அதின்படி நடப்பவனை சிஷன் என்றும் அழைக்கிறோம். முற்காலத்தில் அநேகர் முனிகள் முதலியோரை அண்டி அவர்களுக்குத் தொண்டுபுரிந்து சீஷர்களானதைப்பற்றி பலமுறை கேட்டும் வாசித்துமிருக்கிறோம். மட்டில்லாத ஞானச்சுரூபியாகிய திரு இருதயநாதனே, நமது திவ்விய குரு; அவருடைய அமிர்த வசனங்களுக்கு செவி சாய்த்து அவர் புகட்டும் ஞானத்திற்கேற்க நடப்பதே, சீஷர்களாகிய நமது கடமை.

ஆனால் இப்பேர்ப்பட்ட குரு ஒருவர் நமக்கு அவசியமா? அவசியமே. மனிதன் இவ்வுலகத்தில் பிறந்து வளர்ந்து, புத்தி விபரமடைந்து, காரியங்களின் கருகனங்களை சரிவர அறியத் துவக்கும்போது பற்பல கேள்விகள் புத்தியில் உதிக்கின்றன. நான் எங்கே இருந்து வந்தேன்? எங்கே செல்லுகிறேன்? என் கதி யாது? சாவுக்குப்பின் என்ன நடக்கும்? இவ்வுலகத்தில் யோக்கியமாய் ஜீவிக்கும்படி, அனுசரிக்கவேண்டிய விதிகளென்ன? என, பற்பல எண்ணங்கள் மனதில் எழும்புகின்றன. இவைகள் எல்லாவற்றிற்கும் நமது புத்தியைக்கொண்டு மாத்திரம் சரியான பதில் கண்டுபிடிப்பதென்றால், எவ்வளவு சிரமம்!

ஆகிலும் இக்கேள்விகளுக்கு உறுதியும் நிச்சயமுமான மறுமொழி அறிவது, எவ்வளவோ முக்கியம்! நமது தப்பிதத்தால் நாம் அடையவேண்டிய கதியை இழந்துவிட்டோமாகில், அது நித்தியகாலத்துக்கும் பரிகரிக்கக்கூடாத நஷ்டமாகிவிடும். இத்தனை சங்கடங்களும் ஆபத்து மோசங்களும் நிறைந்த பாதையில், யாதொரு வழிகாட்டியுமில்லையா? தோபியாசின் நெடும் பிரயாணத்துக்கு இரபேல் சம்மனசு வந்து உதவியதுபோல, நமது கையைப்பிடித்து திடனுடன் அழைத்துக்கொண்டுபோய் மோக்ஷகரை சேர்க்கக்கூடிய வழித்துணை ஒருவருமில்லையா?

உலகமானது, என்னுடன் வா, எனது ஞானத்துக்கு மிஞ்சின ஞானம் யாதொன்றுமில்லை, சுகமே வாழ்வதற்குரிய விதிகளெல்லாம் கற்பிக்கிறேன் என்று கூப்பிடுகிறது. அதின் குரலுக்குக் காது கொடாதே. உலகம் நிலையற்றது. அதில் எத்தனை மனிதர்களுண்டோ, அத்தனை அபிப்பிராயங்களுமுண்டு. அதின் அபிப்பிராயம் இன்றைக்கு ஒன்றும் நாளைக்கு மற்றொன்றுமாயிருக்கும். இன்றைக்குப் பரமஞானி என்று உயர்த்தி, அவனையே நாளைக்குப் புத்தியீனன் வைத்தியக்காரன் எனத் தாழ்த்தும் இயல்புடையது. உலக ஞான ஒழுங்குகளெல்லாம், யார் எக்கேடு கெட்டாலும் சகலத்திலும் சுயநலத்தையே முதன்மையாக நாடுவதிலும், முக்கியமாய் சரீரத்தைப் பேணி ஆத்துமத்தைக் கொல்வதிலுமே அடங்கியிருக்கின்றன. எத்தனையோமுறை நீயே இவ்வுலக ஞானத்துக்கு செவி கொடுத்து, அதின்படி நடந்து தவறிப்போனாய்! உன் குற்றங்களை நினைத்து மனஸ்தாபப்படு.

இதோ! மற்றொரு இனிய குரலொலி கேட்கின்றது. சத்தியம் நாமே, ஜீவியந்தரும் உயிர் நாமே, மெய்யான



பாதை நாமே, என்று மனுஷாவதாரமான நித்திய வார்த்தையானவர் சகல மனிதரையும் தம்மிடம் தயவுடன் அழைக்கிறார். அளவற்ற ஞானத்துக்கு இவ்வுலகத்தின் அற்ப ஞானம் இணையாகுமா? நம்மைப் படைத்து இரட்சித்துக் காத்துவருபவரே, நமக்குக் குருவாக வந்தால், இவரைக்காட்டிலும் நாம் ஆசிக்கக்கூடிய வேறு சிறந்த குரு உண்டோ? இந்த திவ்விய குரு அளவற்ற ஞானச்சுரூபியானபோதிலும் பொறுமையுடன் நமது அற்ப புத்திக்கு ஏற்றவாறு படிப்படியாக ஞானத்தைப் புகட்டக்கூடியவர். படிப்பு வாசனை அறியாத ஏழைச் செம்படவர்களாகிய அப்போஸ்தலர்களுக்கு எவ்வளவோ பொறுமையுடன் தெய்வீக ஞானத்தைப் புகட்டி, அவர்களைக்கொண்டு பெரிய தத்துவ சாஸ்திரிகளும் சிரம்பணிந்தேற்றும் சத்திய திருச்சபையை ஸ்தாபித்தார். அவருடைய அமிர்த போதனையிலடங்கிய இன்பத்தைச் சுகித்திருந்த ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் கடலோரத்துக்கும், வனாந்தரத்துக்கும் சென்று, ஆகாரத்தைப்பற்றிமுதலாய் நினையாமல், அவருடைய திவ்விய போதகத்திலேயே கவனமுற்றிருந்தார்கள். நிக்கோதேமுஸ் என்னும் யூதவேதசாஸ்திரி பகலில் அவரிடம் வரக் கூச்சப்பட்டு, இரவிலாகிலும் அவருடைய மதுர வசனங்களைக் கேட்கும்படி செல்வார். பரிசேயர் திவ்விய ஆண்டவரைப் பிடிக்கும்படி அனுப்பிய தூதர்கள்முதலாய் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு, "எந்த மனிதனும் இவ்விதம் ஒருபோதும் பேசினதில்லை" என்று பிரமிப்படைந்தவர்களாய் யாதொரு தீங்கும் செய்யாமல் திரும்பிப்போனார்கள்.

இவ்வித உன்னத குணாதிலட்சணங்கள் அமைந்த குருவுக்கு சிஷர்களாயிருக்கும் பாக்கியமே பாக்கியம்!

கல்விசாஸ்திரங்களில் கீர்த்தி பெற்றவர்களிடம் படித்த மாணாக்கர்கள் தங்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பற்றி எவ்வளவோ பெருமை கொள்ளுகிறார்கள்! தெய்வீக ஞானத்தைக் கற்பிக்க, திவ்விய ஆண்டவரே நமக்குக் குருவானதைப்பற்றி நாம் அதிகமாக சந்தோஷித்து பெருமைகொள்வது நியாயமல்லவா? ஆகிலும் எத்தனையோ கிறீஸ்துவர்கள் தாங்கள் கிறீஸ்துநாதரின் சீஷர் என்று வெளிப்படுத்தவும், உத்தரீயம் ஜெபமாலை சுரூபங்களைத் தரித்துக்கொள்ளவும், பிறமதஸ்தர்முன் கூச்சப்படுகிறார்கள்! என்ன! இந்துக்கள் சாம்பலைப் பூசிக்கொண்டும், பட்டை பட்டையாக நாமத்தைப் போட்டுக்கொண்டும், சகலருக்குமுன் வருவதற்குக் கூச்சப்படுவதில்லை. திவ்விய ஆண்டவரின் சீஷர்களென சகலரும் அறியும்படி வெளிப்படுத்த நாம் மனங்கூசுவோமா? ஆதலால் கோழைத்தனத்தையும் முகத்தாட்சண்ணியத்தையும் தூர அகற்றி, இனிமேல் எவ்விஷயத்திலும் நமது திவ்விய குருவின் போதனைப்படி நடப்போமாக. ஆனால் திவ்விய குரு நமக்குப் போதிப்பது என்ன, என்பாயோ? அவருடைய சீவியமும் போதனைகளும் அடங்கிய சுவிசேஷத்தை வாசி. அவர் உண்டாக்கிய சத்திய திருச்சபையின் போதனைகளுக்கும் அதின் அதிகாரிகளுக்கும் செவி கொடு. கிறீஸ்துநாதர் அனுசாரம் முதலிய பத்திக்குரிய புஸ்தகங்களை வாசி. இந்தப் போதனைகளை ஒரு காதால் கேட்டு, மற்றொரு காதால் போகும்படி விடாமல் மனதில் தரிக்கும்படி செய்து, இவைகளின்படி நட. திவ்விய குருவினிடம் விளங்கிய சகல புண்ணியங்களையும் தன்னிடம் விளங்கும்படி செய்வதே உத்தம சீஷனின் அறிகுறியாகும்.



சேசுநாதர்சுவாமி நாம் சகல புண்ணியங்களையும் அநுசரிக்க வேண்டுமென ஆசித்தபோதிலும், முக்கியமாய் தம்முடைய இருதயத்தில் விளங்கிய இரண்டு புண்ணியங்களை தமது சீஷர்கள் கற்றறிந்து அனுசரிக்க வேண்டுமென்று விரும்புகிறார். "இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தகுணமும் உள்ளவராயிருக்கிறேனென்று நம்மிடம் கற்றுக்கொள்ளுங்கள்" என்கிறார். சர்வ வல்லபரான சர்வேசுரன் தம்மிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி சொல்வதென்ன? அவரைப்போல், உலகத்தை உண்டாக்கவா? இல்லை. அவரைப்போல், அதிசயமான புதுமைகள் செய்யவா? இல்லை. ஆனால் அவரைப்போல் இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தகுணமுமுள்ளவர்களாயிருக்கும்படி கற்பிக்கிறார். சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதாரமானதற்கு ஓர் காரணம், வீண் பெருமை சிலாக்கியமும் அகங்காரமும் சிரசுமட்டும் ஏறியுள்ள உலகத்துக்கு, தாழ்ச்சியையும் சாந்தகுணத்தையும் தமது திவ்விய சீவியத்தால் படிப்பிக்கவே என்னத்தகும்.

சேசுவின் திரு இருதயத்தின் சாந்தகுணத்தைப் பார். அப்போஸ்தலர் பலமுறை மந்தகுணத்துடன் நடந்தபோது, எவ்வளவு பொறுமையுடன் சகித்துக்கொள்ளுகிறார். பாவியான ஸ்திரீயைக் கல்லாலெறிந்து கொல்லும்படி உத்தரவு கேட்டபோது, எவ்வளவு தயை இரக்கம்! தன்னைக்காட்டிக் கொடுக்கப்போகும் சதிதுரோகியை அறிந்திருந்தபோதிலும், மூன்று வருஷகாலமும் எவ்வளவோ அன்புடன் அவனை நடத்திவந்தார். யூதாஸ் முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்கும்போது முதலாய், சிநேகிதா, முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்று அமரிக்கையுடன் உரைக்கிறார். தன்னைக் கொலை செய்த பாதகர்கள் மட்டில் எவ்வளவு சாந்த

குணம்! சிலுவையில் தொங்கும்போது அவர்களுக்காக மன்றாடுகிறார். தங்குவதற்கு இடங்கொடாத சமாரிய நாட்டாரை, வானத்திலிருந்து அக்கினி விழுந்து நாசமாக்கும்படி விரும்பின அப்போஸ்தலர்களைக் கண்டித்து, மனுமகன் சாந்தகுணத்துடன் மனிதரை இரட்சிக்க வந்திருப்பதாகத் தெரிவிக்கிறார். கடைசியாய், நம்மைத்தானே எவ்வளவோ சாந்தகுணத்துடன் நடத்தி வந்திருக்கிறார். நாம் எத்தனையோ பாவங்களைக் கட்டிக்கொண்டோம். செய்த பிரதிக்கினைகளை மீறி, எத்தனையோ தடவை அதே பாவங்களில் திரும்பவும் திரும்பவும் விழுந்தோம். ஆகிலும் நாம் மெய்யான மனஸ்தாபப்படும் ஒவ்வொரு விசையும் நம்மைப் பொறுத்துக்கொள்ள தயாராயிருக்கிறார்.

இவ்வளவு சாந்தகுணம் நிறைந்த திரு இருதயத்துக்கு சீஷனாயிருக்க விரும்பும் என்னிடத்தில் எவ்வளவு முன்கோபம், எவ்வளவு படபடப்பு! என் மனச் சமாதானத்தைக் கலைத்து, மனவருத்தமுண்டாக்க, ஒன்றுக்குமுதவாத ஓர் அற்பகாரியம், ஓர் அற்ப வார்த்தை, ஒரு சிறு சைக்கினை போதும். இதினால் எத்தனையோ தடவை பிறர் சிநேகத்துக்கு விரோதமாய் நடந்தேன். "எங்கள் கடன்காரர்களுக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே, எங்கள் கடன்களை எங்களுக்குப்பொறும்" என்று பரமண்டலமந்திரத்தில் சொல்லிவிட்டு, பிறர் எனக்கு செய்த குற்றங்களை மன்னிக்கமாட்டேனென்று மூர்க்கமாய் நடந்தால், எனது கணக்கில்லாத பாவங்களை சர்வேசுரன் எப்படி மன்னித்துக்கொள்ளுவார்? ஆதலால், திரு இருதயத்தின் சாந்த குணத்தை இனி கண்டுபாவிப்பேன். "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் பூலோகத்தைக் கைக்கொள்வார்கள்."



திரு இருதயத்தில் விளங்கும் மற்றொரு புண்ணியம் தாழ்ச்சி. இந்தத் தாழ்ச்சியில்லாததால்தான், லூசிப்பேர் பரலோகத்திலிருந்து பாதாளமட்டும் விழுந்தது. ஆதாம் ஏவாள் தங்களையும் தங்கள் சந்ததியாரையும் கேட்டுக்குள்ளாக்கினது. சர்வேசுரனுக்கு சமமாவீர்கள் என்று பசாசு சொன்னதை நம்பி, விலக்கப்பட்ட கனியைத் தின்றதினாலேயே. லுத்தேர் முதலிய பதிதர்கள் முளைத்ததும் ஆங்காரத்தினாலேயே. ஆங்காரத்தினால் கெட்டழிந்துபோகும் மனுஷசந்ததிக்கு திவ்விய குரு காண்பித்திருக்கும் தாழ்ச்சி யாது?

அவர் பிறக்குமிடம் மாட்டுக்கொட்டில். அவருடைய தாய் தந்தையர் தச்சுவேலை செய்து பிழைக்கும் ஏழைகள். அவருடைய அப்போஸ்தலர்கள் ஏழைச் செம்படவர்கள். மூன்று வருஷகாலம் பிரசங்கஞ்செய்தபோது, பட்சிகளுக்குக் கூடுகளும் நரிகளுக்கு வளைகளுமுண்டு, மனுமகனுக்கோ தலைசாய்க்க முதலாய் இடமில்லை. மேலும் எத்தனையோ தடவை பசிதாகத்தினால் கஷ்டப்பட்டார். அவரை ஜனங்கள் அரசனாக்க முயலும்போது, அவர்களுக்குத் தெரியாமல் விலகிப்போய் விடுகிறார். ஆனால் அவரைப்பிடித்து கொலை செய்யும்படி பூங்காவனத்துக்குச் செல்லும்போது, எதிர்கொண்டழைக்க வருகிறார். குழப்பக்காரனென்றும், பைத்தியக்காரனென்றும், பேய்பிடித்தவனென்றும் முதலாய், தம்மை நிந்திக்கும்படி விட்டுவிடுகிறார். படாத பாடுபட்டு, மரணமட்டும் கீழ்ப்படிந்து இரண்டு கள்ளருக்கு நடுவில் அதிக பெரிய கள்ளன்போல் கழுமரத்தில் மரணமடைகிறார். என்ன தாழ்ச்சி! என்ன கீழ்ப்படிதல்!

என்னிடத்திலோ, எவ்வளவு வீண் பெருமை, எவ்வளவு அகங்காரம்! மேலுள்ளோர் கட்டளைகளை கொடுக்

கும்போது, எவ்வளவு முறுமுறுப்பு, எத்தனை சாக்குப்போக்குகள்! பிறர் என்னை மேலாக மதித்து, மற்றவர்களைப்பற்றி தாழ்ந்த எண்ணங்கொள்ளும்படி, எத்தனை சூழ்ச்சிகள், எத்தனை உபாயங்கள்! பிறர் என்னைப்பற்றி சற்று குறைவாய்ப் பேசிவிட்டால், அல்லது மற்றொருவனை எனக்கு மேலாக உயர்த்திவிட்டால், என்ன கோபம், என்ன காய்மகாரம்! திரு இருதயமே, என் நீசத்தனத்தைக்கண்டு நானே வெட்கப்படுகிறேன். உமது சீஷனின் இருதயத்திலுள்ள அகங்காரத்தைச் சுட்டெரித்து, தாழ்ச்சியை அளித்தருளும்.

"இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே! என் இருதயம் தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்திருக்கும்படி செய்தருளும்!"

---

## 6-ம் அதிகாரம்.

## பலி.

திரு இருதயத்தைக்குறித்து நிறைவேற்றக்கூடிய பற்பல அலுவல்களில்; இந்த அலுவலே மகா சிறந்தது எனத்தகும். ஏனெனில் தன்னைத்தானே பலியாக ஒப்புக்கொடுக்கிறவன், தனக்கென்று யாதொன்றும் வைத்துக்கொள்ளாமல், தன்னை சகலத்திலும் பரித்தியாகம் பண்ணி நடக்கவேண்டியிருக்கிறது. இதினால்தான், முத். மார்க்கரீத்மரியம்மாள் தனது ஆயுள்காலம் முழுவதும் இந்த அலுவலைத் தனக்குக் குறித்துக்கொண்டு, இதைச் சுமுத்திரையாய் நிறைவேற்ற இடைவிடாமற் பிரயாசப்பட்டுவந்தாள். திவ்விய ஆண்டவர் நமக்காக பலியானதை சரிவரக் கண்டுணர்வோமாகில், இவ்வரிய பெரிய உபகாரத்துக்கு நன்றியறிதலாக நாமும் நம்மை முழுதும்



திரு இருதயத்துக்குப் பலியாக ஒப்புக்கொடுப்போமென்பது நிச்சயம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் சாதாரணமாய் ஆடுமாடுகளையும் புறாக்களையும் பலியாக ஒப்புக்கொடுத்தார்கள். பலிக்காக தெரிந்துகொள்ளப்பட்டவைகள் யாதொரு அங்கக்குறைகளின்றி, ஏர் உழுவது முதலிய வேலைகளில் பிரயோகிக்கப்படாமல், பலிக்காக விசேஷ விதமாய் வளர்க்கப்பட்டவைகளாயிருந்தன. அவைகளின்பேரில் பாவத்தைச் சுமத்துவதற்கு அடையாளமாக அவைகளின்மேல் இரு கரங்களையும் விரித்து நீட்டியபின், அவைகளைக் கொன்று, அவைகளின் சரீரம் முழுவதையும், அல்லது சில பாகங்களையென்கிலும், எரித்து சாம்பலாக்கினார்கள். இரத்தம் சிந்தும் இப்பலிகளன்றி, இரத்தம் சிந்தாத பலிகளுமிருந்தன. ஆனால் இவைகளெல்லாம், பிற்காலத்தில் சிலுவையில் நடைபெறவேண்டியிருந்த இரத்தப்பலியையும், இரத்தம் சிந்தாத விதமாய் அது புதுப்பிக்கப்படும் திவ்விய பூசையையும் குறித்தன. இந்த மிருகப் பலிகளை முற்காலத்தில் சர்வேசுரன் ஏற்றுக்கொண்டது, இவைகளால் குறிக்கப்பட்ட சிலுவைப் பலியினிமித்தமே.

மனுமக்களுடைய பாவ அக்கிரமங்களைத் தன்பேரில் சுமந்துகொண்டு, அவர்களுக்காகப் பலியாவதற்கு, யாதொரு குற்றம் குறையுமில்லாததும், சர்வேசுரனுக்கு உகந்ததுமான ஓர் உன்னத பலி தேவையாயிருந்தது. "தன் சிநேகிதர்களுக்காக தன் உயிரை ஒப்புக்கொடுப்பதைக் காட்டிலும், அதிக சிறந்த சிநேக அடையாளம் வேறொன்றுமில்லை" என்று அறிந்திருந்த சுதனாகிய சர்வேசுரன், மனிதர்பேரில் தமக்குள்ள அணைகடந்த

நேசத்தைக் காட்டும்படி, மனிதனாய்ப் பிறந்து தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார்.

பாடுபட்டு சிலுவையில் மரித்தபோது மாத்திரமல்ல, தமது சீவியகால முழுவதும் நமக்காகப் பலியானார். பெத்லகேமிலும், எஜிப்திலும், நசரேத்திலும், வனாந்தரத்திலும், கலிலேயா யூதேயா சமாரிய நாடுகளிலும், எங்கே சென்றபோதிலும், தரித்திரமும், எதிரிகளின் இடைஞ்சல்களும், சகலவித துன்ப வருத்தங்களும், நிழல்போல் அவரோடுகூடச் சென்றன. மேலும் அவர் படவேண்டிய அகோர பாடுகளின் நினைவும் தெளிவாய் எப்போதும் அவர் கண்முன் இருந்தது. சர்வாதிகர்த்தராகிய அவருக்கு இஷ்டமாயிருந்தால், மகா கீர்த்தி பெற்ற மன்னாதி மன்னர்களின் குடும்பங்களில் பிறந்து, சகலவித செல்வாக்கும் பாக்கியமும் அனுபவித்திருக்கக் கூடுமென்பது மெய்யே. ஆனால் அவர் அழிந்துபோகும் இவ்வுலக நன்மைகளைத் தேடி வரவில்லை. மனிதருடைய பாவங்களுக்காகப் பலியாகி, தமது பிதாவுக்குரிய மகிமையைச் செலுத்தவேண்டுமென்னும் ஆவலே, அவரைப் பரலோகத்திலிருந்து பூலோகமட்டும் இறங்கிவரச் செய்தது. ஆதலால் அப்பேர்ப்பட்ட திவ்விய பலிக்கேற்ற கஷ்டமான சீவியத்தைப் பூரண மனதுடன் தெரிந்துகொண்டார்.

நமக்காகப் பலியாகும்படி அவரிடம் பற்றியெரிந்த அளவற்ற நேசத்தால், தமது சத்துராதிகள் மகா நிஷ்டூரத்துடன் தமது உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கும்படி விட்டுவிட்டார். அவர் பட்ட பாடுகளால் பலமுறை இறந்திருக்கவேண்டுமானபோதிலும், புதுமையாகத் தமது உயிரைக் காப்பாற்றி அதிகமதிகமான வேதனைகளை அனுபவிக்கத் திருவுளமானார். தமது திரு இரத்



தத்தையெல்லாம் ஒரே சமயத்தில் சிந்தாமல், பூங்காவனத்திலும், கற்றூணில் கட்டுண்டு அடிக்கப்பட்டபோதும், முண்முடி சூட்டப்பட்டபோதும், கல்வாரிமலைக்குச் செல்லும்போதும், சிலுவையில் அறையுண்டபோதும், ஈட்டியால் குத்தி ஊடுருவப் பட்டபோதும், இவ்விதமாகப் பற்பல சமயங்களில் பற்பல வேதனைகளுடன் கடைசித் துளிபரியந்தம் நமக்காகச் சிந்தச் சித்தமானார்.

இதோ சிலுவையில் தொங்கும் அவருடைய திருச்சரீரத்தைப் பார்! இந்த உருவம் மனிதனுடையதா? அல்ல, இது குஷ்டரோகியின் சரீரம், நசுக்கப்பட்ட ஓர் புழுவின் உருவம் என்று சொல்லும்படி உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஏக இரணமாயிருக்கிறது. ஆகிலும் இவரோ மனிதனாய்ப் பிறந்தவர்களுக்குள் மகா அழகு சோபனம் பொருந்தியவர்! இவரோ கோடான கோடி சம்மனசுகள் புடைசூழ்ந்து ஆராதிக்கும் சுதனாகிய சர்வேசுரன்! உன் கணக்கற்ற பாவ அக்கிரமங்களைத் தமது தோளின்மேற் போட்டுக்கொண்டு, உனக்கு அடைபட்டிருந்த மோட்ச வாசலைத் திறந்துவிடும்படி இப்பேர்ப்பட்ட கோலத்தை அடைந்தார். இவ்வளவு நேசத்துடனும் தாராள குணத்தோடும் உனக்காகப் பலியான திவ்விய சேசுவின் சிலுவையின் அடியில் முழந்தாட்படியிட்டு நன்றியறிந்த தோத்திரம் புரிந்து, இவ்வளவு நல்ல ஆண்டவரின் திரு இருதயத்துக்கு உன்னைத்தானே பலியாக ஒப்புக்கொடு.

திருச்சிலுவைப் பலியினால் சகல மனிதருடைய பாவ அக்கிரமங்களுக்கு ஏற்ற பரிகாரமும், பிதாவாகிய சர்வேசுரனுக்கு மட்டில்லாத மகிமையும் செலுத்தப்பட்டது. அதின் பலன்கள் இவ்வுலகத்தையும் இதைப்போன்ற கோடாகோடி உலகங்களையும் இரட்சிக்கப் போதும்.

சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்ததுடன் விட்டுவிடாமல், அந்தத் திருச்சிலுவையின் பலியையே எவ்விடங்களிலும் இரத்தம் சிந்தாத விதமாய்ப் புதுப்பித்து, சிலுவைப் பலியினால் உண்டான ஏராளமான பலன்களையும் வரப்பிரசாதங்களையும் நமதுபேரில் பொழியும்படியாக சேசுநாதர் சுவாமி திவ்விய பூசையை ஏற்படுத்தியருளினார். இந்தத் திவ்விய பூசையில் தம்மைத்தாமே நமக்காக இன்னம் தினந்தோறும் பலியாக ஒப்புக்கொடுத்துவருகிறார்.

“என்னைச் சிநேகித்து எனக்காக தம்மைத்தாமே கையளித்தார்” என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருப்பதின் கருத்தை இப்போது சற்றாகிலும் கண்டுணர்ந்தோமா? திவ்விய ஆண்டவரைப்போல், நமக்காகப் பாடுபட்டவர்களார்? அவரைப்போல் பூரண மனதுடன் நமக்காகத் துன்ப வருத்தங்களை அனுபவித்தவர்களார்? அவர் நம்மைக் காப்பாற்றினதுபோன்ற பெரும் ஆபத்துகளினின்று நம்மைக்காத்து இரட்சித்தவர்களார்? ஆதலால் பூரண மனதுடன் நாமும் நம்மை முழுதும் அவருடைய திரு இருதயத்துக்குத் தத்தம் செய்து, நம்மைத்தானே பலியாக ஒப்புக்கொடுப்போமாக.

ஆனால் பலி என்னும் வார்த்தையே எனக்குப் பயத்தை உண்டாக்குகிறது, இந்த அலுவலை நிறைவேற்ற என்னிடத்தில் போதுமான புண்ணியமும் திடமும் இல்லை, இந்த அலுவலை சுமுத்திரையாய் செய்துமுடிக்க, சன்னியாசிகள், கன்னியாஸ்திரிகள், குருமார்களாயல்லோ இருக்கவேண்டும் என்று பயப்படாதே, உலகத்தை முற்றிலும் துறந்தவர்களாயிருந்தால், இந்த அலுவலை அதிக சுலபமாய் நிறைவேற்றலாமென்பது மெய்யே. ஆயினும் எந்த அந்தஸ்திலுள்ளவர்களும் தங்களை திரு இருதயத்துக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கலாம். இந்த



அலுவலை நிறைவேற்றுவதில் பற்பல படிகளுண்டு. முதல்நாளிலேயே உச்சிப்படியில் வந்து சேரமுடியாது. இடைவிடாமல் பிரயாசப்பட்டுவந்தோமாகில், நாளுக்குநாள் புண்ணியத்தில் விர்த்தியடைந்து, கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்த படிகளுக்கு வந்து சேர்வோம். ஆதலால் கோழைத்தனத்தை நீக்கி, திரு இருதயத்தின் ஒத்தாசையின்பேரில் முழு நம்பிக்கை வைத்து, நம்மை அதற்குப் பலியாக்குவோமாக.

நம்மைப் பலியாக்குவதற்கு நாம் செய்யவேண்டியதென்ன? வீண்பெருமை சிலாக்கியம், உலக செல்வ சுகங்களின்பேரிலுள்ள கிரமமற்ற பற்றுதல்கள், நமது ஆசாபாசங்களாகிய சகலத்தையும் திரு இருதயமாகிய பீடத்தில் பலியாக்கி, அந்தத் திரு இருதயத்தில் பற்றியெரியும் சிநேக அக்கினியால் சுட்டெரிக்கவேண்டும். எதெது நமக்குத் துன்பமும் மனவருத்தமும் சஞ்சலமும் வருவிக்கிறதோ, அதையெல்லாம் திவ்விய ஆண்டவரின் கரங்களினின்று இறங்கிய வரங்களென்று பொறுமையுடனும் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு மன அமைதியுடனும் ஏற்றுக்கொள்ளுவதுமன்றி, நம்மை அடிக்கடி ஒறுத்து, பற்பல தபசுமுயற்சிகள் செய்து ஒப்புக்கொடுப்போமாக. நம்மையும் நாம் செய்யும் நன்மைகளையும் பிறர் ஒருபொருட்டாய் மதியாமல், நம்மைக் கவனியாதவர்கள்போல நடந்தால், சகலருக்கும் ஓர் நாள் சம்பாவனை அளிக்கவேண்டிய திரு இருதயம் அறிந்திருப்பது போதுமென மனதில் சந்தோஷிக்கக்கடவோம். நமது வலது கை செய்வது இடதுகைக்குத் தெரியாமலிருக்கட்டும். இவ்விதமாக, சுயநலத்தையும் உலகத்தின் முக ஸ்துதி தோத்திரங்களையும் தேடாமல், சகலத்திலும் திரு இருதயத்தையே நமது கண்முன்பாக வைத்து அதற்கு

இஷ்டமானபிரகாரம் நம்மை நடத்தும்படி விட்டுவிடு. எவ்வித துன்ப வருத்தங்களையும் திரு இருதயத்தைக் குறித்து அனுபவிக்கத் தயாராயிருப்போமாகில், இதுவே திரு இருதயத்துக்கு நம்மைப் பலியாக்குவதாகும். இந்த சிறந்த அலுவலுக்கு தைரியத்துடன் நம்மை ஒப்புக்கொடுத்து, இதை சுமுத்திரையாய் நிறைவேற்றுவதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களை ஏராளமாய் நமது பேரில் பொழியும்படி திரு இருதயத்தை நோக்கி மன்றாடுவோமாக.

---

## 7-ம் அதிகாரம்.

## ஊழியன்.

சிருஷ்டிகருக்கு ஊழியஞ்செய்வது சகல சிருஷ்டிகளையும் சார்ந்த கடமை. ஒரு குயவன் தான் செய்யும் மட்பாண்டங்களைத் தன் இஷ்டம்போல் எந்த உபயோகத்துக்கும் பிரயோகிப்பான்; ஏனெனில் அவைகள் அவனுக்குச் சொந்தம். ஆகிலும் அவன் மண்ணை உண்டாக்கவில்லை. மனிதனோ, சர்வேசுரனுடைய சிருஷ்டி. சர்வேசுரன் ஒருக்ஷணம் அவனைக் கைவிடுவாராகில், அவன் சரீரமும் ஆத்துமமும் இருந்த இடம் தெரியாமல் ஒன்றுமில்லாமற்போம். ஆதலால் குயவனுக்கு மட்பாண்டங்கள் சொந்தமாயிருப்பதைவிட மனிதனுடைய சரீரமும் ஆத்துமமும் சர்வேசுரனுக்கு அதிகமான உரிமையுடன் சொந்தம். தன்னை உண்டாக்கியவருக்கு எக்காலமும் ஊழியம் புரிவது அவனது அதி முக்கிய கடமை. ஆகிலும் இவ்வுலகிலுள்ள சகல சிருஷ்டிகளுள், அவன் ஒருவனே ஊழியஞ் செய்யமாட்டேன் என்று நன்றிகெட்டவனாய் நடப்பவன்!



சர்வேசுரன் மனிதனை ஊழியனாகமாத்திரம் உண்டாக்காமல், அவனைத் தமது சுவீகாரப் பிள்ளையாகத் தெரிந்துகொள்ளச் சித்தமானார். மனிதனுக்கு இலவசமாக தமது இஷ்டப்பிரசாதத்தை அளித்து, அவனை சுபாவத்துக்கு மேலான அந்தஸ்துக்கு உயர்த்தி, அவன் பிரமாணிக்கமாய் நடந்தால், மோட்சத்தில் தம்மை முகமுகமாய்த் தரிசிக்கும் பாக்கியம் அளிக்கத் திருவுளமானார். சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்வதற்கு இவ்வதிசய அன்பும் கிருபாகடாட்சமும் மற்றொரு காரணமாகிறது.

சர்வேசுரனுக்கு முழு மனதுடன் ஊழியஞ்செய்ய மூன்றும் காரணமொன்றுண்டு. ஆதி துவக்கத்தில் மனிதருக்கு திறந்திருந்த மோட்சவாசலை, ஆதாம் சர்வேசுரனுடைய கட்டளையை மீறி, தனக்கும் தன் சந்ததியாருக்கும் அடைத்துவிடவே, [illegible]னாகிய சர்வேசுரன் மனிதனாய் அவதரித்து, தமது விலைமதியாத திரு இரத்தத்தை நமது ஆத்துமங்களுக்குக் கிரயமாய்க்கொடுத்து, நம்மை இரட்சித்து, மோட்ச வாசலைத் திரும்பவும் மனுக்குலத்துக்குத் திறந்துவிட்டார். ஆதலால், சிருஷ்டிக்கப்பட்டதினாலே சர்வேசுரனுக்குச் சொந்தமாயிருப்பதுமன்றி, இரத்தக்கிரயம் கொடுத்து வாங்கினதினாலே சர்வேசுரனுக்கு இரட்டிப்பாய்ச் சொந்தமானோம்.

மேலும் நாமே எத்தனைமுறை ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யும்படி நம்மைத்தானே பூரண சுயாதீனத்துடன் ஒப்புக்கொடுத்தோம்! சில வேளை நாம் உலகத்தைத் துறந்து, சர்வேசுரனுடைய ஊழியத்துக்காக உத்தமபிரகாரம் ஜீவிக்கும்படி சன்னியாசிகள் கன்னியாஸ்திரிகளாயிருக்கலாம்; அல்லது, சர்வேசுரன் நமக்குக் குறித்துள்ள சமுசாரவாழ்க்கையிலிருந்துகொண்டே, அவரு

டைய ஊழியத்தைப் பிரதானமாகக்கொண்டு நடப்பதாக வாக்குக்கொடுத்திருக்கலாம். இந்தக் காணிக்கை முயற்சிகளைச் செய்யும்போது, நமது இருதயத்தில் பற்றியெரிந்த பத்தி உருக்கத்தை நினைத்து, திரும்பவும் அப்பிரதிக்கினைகளைப் புதுப்பிப்போமாக.

சர்வேசுரனை அறிந்து சிநேகித்து அவருக்கு ஊழியஞ் செய்வது தவிர, மற்றவை எல்லாம் வீணிலும் வீண். பணமே தங்கள் தெய்வமெனக் கும்பிட்டு, தாம்ங்கள் கொடாமல், மிதமிஞ்சி இரவும் பகலும் உழைத்து, பிறரை ஏய்த்து ஏமாற்றித் திரண்ட ஆஸ்திபாஸ்திகள் சேர்த்தவர்கள், கல்லறைக்குத் தங்களுடன் கொண்டுபோவதென்ன? அவர்கள் பிணத்தை மூடுகிற கோடித்துணியல்லாமல் வேறொன்றுமில்லை. மறு உலகத்தை மறந்து, இவ்வுலகமே சதம் என்று நினைத்து, பாவசந்தோஷங்களைத் தேடித்திரிகிறவர்கள் அடையும் பலனென்ன? இம்மையில் கொடூர வேதனை நோக்காடுகளும், மறுமையில் முடிவில்லா நரக ஆக்கினையுமே. சர்வேசுரன் தமது ஊழியத்துக்காக கொடுத்திருக்கும் புத்தி தீக்ஷண்யம், தேக பலம், நீடிய ஆயுள் முதலியவற்றை அவருடைய ஊழியத்தில் பிரயோகியாமல், உலகத்தின் நிலையற்ற வீண் மகிமை பெருமைகளே தங்கள் கதியென்று எண்ணி, அவைகளை நாடுவதில் தங்கள் ஆயுளைச் செலவழிப்பவர்கள், கண்ட பலனென்ன? அவர்கள் இறந்து சிலநாட்களில், அவர்களைப்பற்றி நினைப்பவர்கள் எத்தனைபேர்? அவர்கள் இவ்வுலகில் அடைந்த மகிமை, மறு உலகில் கொடுக்கவேண்டிய கணக்குக்கு உதவுமா? ஆகிலும் யாருக்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ, அவர்களிடமிருந்து அதிகம் கேட்கப்படும் என்பது உறுதி. சலோமோன் அரசன் ஞானிகளிலெல்லாம் பெரும் ஞானி, சகலவித செல்



வாக்குமுள்ளவர், உலோக கீர்த்தி சுக சந்தோஷங்களை பூரணமாய் பெற்று அனுபவித்தவர். அவர் சொல்வது யாது? சர்வேசுரனைச் சிநேகித்து அவருக்கு ஊழியஞ் செய்வது தவிர, மற்ற யாவும் விழலிலும் விழல் என்றுரைக்கிறார்.

சர்வேசுரனுக்கு ஊழியம் பண்ணுவது நமது மேல் சுமந்த கடமையென்றும், அவரைவிட்டு விலகி சிருஷ்டிகளுக்குத் தொண்டூழியம் புரிவது முழு மதியீனமென்றும் அறிந்தபின், சர்வாதி கர்த்தராகிய நமது எஜமானே தமது தாசர்களுக்கு எத்தனைவிதமாய் ஊழியம் புரிகிறாரென்று சற்று ஆராய்ந்து பார்ப்போம். இவ்வளவு நல்ல எஜமானைச் சேவிப்பதற்கு, தானாகவே ஆசையும் ஆவலும் உண்டாகும்.

இவ்வுலகம் ஓர் சிறந்த அரண்மனை. வானமண்டலத்திலுள்ள சந்திர சூரிய நட்சத்திரங்களும், பூமியில் நம்மைச் சூழ்ந்துள்ள விதவிதமான கோடா கோடி ஜீவராசிகளும் மற்ற சிருஷ்டிகளும் எதுக்காக உண்டாக்கப்பட்டன? மனிதனுக்காகவே. சர்வேசுரன் அவைகளை ஓர் க்ஷணம் கைவிடுவாராகில், அக்ஷணமே சகலமும் ஒன்றுமில்லாமற்போகும். சந்திர சூரிய நட்சத்திரங்களைக் கொண்டு ஒளியும் உஷ்ணமும், தாவர வர்க்கங்களிலிருந்து காய் கனிகளும், மிருகங்களைக்கொண்டு பற்பல பிரயோஜனங்களும் நமக்கு அளித்து, சர்வேசுரன் நமக்கு இடைவிடாமல் ஊழியம்புரிந்து வருகிறாரெனத்தகும்.

மனுஷாவதாரமான சுதனாகிய சர்வேசுரன் சொல்வதென்ன? மனுமகன் பணிவிடை பெறுவதற்கல்ல, பணிவிடை புரிவதற்கே வந்தார் என்று உரைக்கிறார். இதைத்

துலக்கமாய்க் காட்டும்படி சர்வாதி தேவன் தமது அப்போஸ்தலரின் கால்களைக் கழுவித் துடைத்து, தங்கள் எஜமான் செய்தது போல்வே, அவர்களும் ஒருவர் ஒருவருக்கு ஊழியம்புரியும்படி கட்டளையிடுகிறார். நல்ல சமாரித்தான் குற்றுயிராய்க் கிடந்த வழிப்போக்கன்மேல் மனமிரங்கி, அவன் காயங்களில் எண்ணெய்யும் திராக்ஷ ரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, தன் வாகனத்தின் மேல் அவனைப் பதனமாய் ஏற்றி சத்திரத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தானென்று சேசுநாதர்சுவாமி நுணு நுணுக்கமாய் விவரிக்கும்போது, பாவத்தால் குற்றுயிராய்க்கிடந்த நமக்கு அவர் புரியும் ஊழியத்தை நினைப்பூட்டி, நாமும் அவர்பேரில் கொண்ட நேசத்தைக் குறித்துப் பிறருக்கு ஊழியம் பண்ணும்படி தூண்டுகிறார். குஷ்டரோகமும் தொற்றுவியாதியும் உள்ளவர்களுக்கு, சன்னியாசிகள் கன்னியாஸ்திரிமார்களும் பத்தியுள்ள கிறீஸ்துவர்களும் ஊழியம் பண்ணுவதுபோல், கிறீஸ்து பிறக்குமுன் உதவிபுரிந்தவர்கள் ஒருவருமில்லை. திவ்விய ஆண்டவர் தமது ஜீவியகாலத்தில் நோயாளிகளுக்குக் காண்பித்த இரக்கமும், சகலத்துக்கும் எஜமானாகிய போதிலும் அவர் ஜீவித்த தாழ்மையான ஜீவியமுமே, இவர்களுக்கு நன்மாதிரிகையாயிற்று.

தமது ஜீவியகாலத்தில் மாத்திரமல்ல, திவ்விய நற்கருணையிலும் தான் எஜமான் என்பதை மறைத்துத் தாழ்மையான ஜீவியம் ஜீவித்து வருகிறார். நமக்கு எப்போது அவரைச் சந்திக்க இஷ்டமுண்டோ, அப்போது நம்முடன் புழங்க இரவும் பகலும் காத்துக்கொண்டிருக்கிறார். நமக்கு என்றைக்கு அவரை நமது இருதயத்தில் வரவழைக்க இஷ்டமோ, அன்றைக்கு நம்மிடம் எழுந்தருளி வருகிறார். குருவானவருக்கு எவ்விடம் அவரை



வைத்திருக்கப் பிரியமோ, அவ்விடம் இருப்பார்; எவ்வளவுகாலம் வைத்திருக்கப் பிரியமோ, அவ்வளவு காலம் இருப்பார். ஆதலால் எல்லாம் மனிதருடைய இஷ்டத்தைப் பொருத்ததாயிருக்கும்படி விட்டுவிட்டு, அவர்களுக்குப் போஜனமாகி, சகலவித ஞான நன்மை உதவிகளும் புரிந்து வருகிறார்.

சர்வேசுரன் நமக்கு செய்துவரும் இவ்வித உதவி எல்லாம் நமதுபேரில் வைத்த சிநேகத்தினாலல்லவா? இந்த அளவில்லாத சிநேகம் சேசுவின் திரு இருதயத்தில் சுவாலைவிட்டெரிகிறது. இந்தத் திரு இருதயத்துக்கு ஊழியம்புரிய, நாம் எத்தனையோ விதமாய்க் கடமைப்பட்டிருக்கிறோம்! அதற்கு ஊழியம்பண்ணி மோட்சத்தை அடைவதே நமது கதி, அதுவே நமது பாக்கியமாயிருக்கவேண்டும். இதுவரையில் திரு இருதயத்தை விட்டு அகன்று, அற்ப சிருஷ்டிகளுக்கும் நீச ஆசாபாசங்களுக்கும் அடிமைப்பட்டு நாம் அனுபவித்த நிர்ப்பாக்கியங்கள் போதும். சகல உலோகாதி கர்த்தரை மாத்திரம் எஜமானாகக்கொண்டு, அவருக்கு ஊழியம்புரிவதைக் காட்டிலும் மேலான சுயாதீனமுண்டா? முடிவில்லா மோட்ச பாக்கியத்தைவிட நமது ஊழியத்துக்குத் தேடக்கூடிய மேலான சம்பாவனையுண்டா? அழிந்துபோகும் இவ்வுலக நன்மைகளுக்கு மனிதர் உழைப்பதில் பத்திலொரு பங்கு நூற்றிலொரு பங்கு, என்றும் அழியாத பேரின்ப பாக்கியத்தை அடைய நாம் உழைக்கிறோமா? அளவில்லாத சிநேகத்துடன் நம்மை நேசிக்கும் ஆண்டவருடைய ஊழியத்தில் இதுவரையில் நாம் காட்டிய அசட்டைத்தனத்துக்காகவும் நன்றிகெட்டதனத்துக்காகவும் மிகுந்த விதனப்பட்டு, இந்த சிநேக

தேவனின் திரு இருதயத்துக்கு என்றென்றைக்கும் நம்மை ஊழியர்களாக ஒப்புக்கொடுப்போமாக.

சிலர் சொல்வதாவது: திரு இருதயத்துக்காக உழைத்து அதின் மகிமையை எங்கும் நாட்ட, எனக்கு வெகு ஆசை; ஆனால் இந்த அலுவலுக்கு வேண்டிய புத்தி தீக்ஷண்யமும் சாமர்த்தியமும் நேரமும் எனக்கில்லை, இன்னின்னானைப்போலிருந்தால் வெகு நன்மை செய்வேன் என்பார்கள். வேறு சிலர் நான் வியாதிக்காரன், பலவீனன், வயோதிகன்; நல்ல சரீர சௌக்கியமும் பலமுமிருந்தால், திரு இருதயத்துக்காக வெகுவாய் உழைப்பேன் என்பார்கள். வேறு சிலர் இப்போது நானிருக்கும் அந்தஸ்து இவ்வூழியத்துக்கு ஏற்றதல்ல, எனக்கு அதிக சோதனைகளும் தடங்கல்களுமுண்டு, ஆனால் இன்னம் சில வருஷங்கள் சென்றபின், இன்னின்ன அந்தஸ்திலிருக்கும்போது, என்னைப்போல் திரு இருதயத்துக்காக உழைக்கக்கூடியவர்கள் ஒருவருமில்லை என்பார்கள். இவர்கள் எல்லோரும் இல்லாத காரியங்களைப்பற்றி கனாகண்டு உள்ள காலத்தை வீணேபோக்குகிறவர்கள். உன்னால் முடியாதவைகளை நிறைவேற்றும்படி திரு இருதயம் கேட்பதில்லை. உன்னை எந்த அந்தஸ்தில் தற்காலம் வைத்திருக்கிறதோ, அந்த அந்தஸ்தில் அதின் சித்தப்படி நீ நடக்கவேண்டுமென்பதே அதின் விருப்பம்.

ஆதலால் உன் அந்தஸ்தின் கடமைகளை சரிவர நிறைவேற்றி, சர்வேசுரனால் உனக்கு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்குப் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து, அதிசயமான வீரியச் செயல்களுக்கு தருணம் எப்போது வருமோ என்று காத்திராமல், அன்



றுடம் செய்யவேண்டிய வேலைகளை சுமுத்திரையாய்ச் செய்துமுடித்து, இன்பத்திலும் துன்பத்திலும் மன அமைதியைக் காப்பாற்றிவா. திரு இருதயத்துக்கு மனவருத்தம் உண்டாக்கக்கூடியதென்று அறிந்த எவ்விஷயத்தையும் தூர அகற்று; யாதொரு சமயம் பலவீனத்தால் தவறிப்போனால், உடனே துக்க மனஸ்தாபப்பட்டு, ஆத்துமத்தைத் தூய்மையாக்கிக்கொள்.

பிறருக்குச் செய்யும் ஊழியம் திவ்விய ஆண்டவருக்கே செய்யப்பட்டதாகக் கடைசிநாளில் பாவிக்கப்படுமென்பதை மறந்துபோகாதே. சேசுநாதர்சுவாமி உயிரோடு நமது மத்தியில் ஜீவித்துவந்தால், அவருக்கு உதவிபுரிய எவ்வளவோ ஆசையுடன் தீவரித்துச் செல்வாய். இதோ! சேசுநாதர்சுவாமி ஏழை எளியவர்கள் போலும், குருடு செவிடு நொண்டி முடமானவர்கள் போலும், வியாதிஸ்தர் விருத்தாப்பியர்கள்போலும் பற்பல விதமாய் நம்மிடம் வருகிறார். அவருக்கு ஊழியம் புரிய நம்மிடம் மெய்யான ஆசை உண்டாகில், இப்பேர்ப்பட்டவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிவோமாக. இவ்விதம் நடந்தால், சேசுநாதர்சுவாமி பொதுத்தீர்வை நாளில் நம்மை நோக்கி, “என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள். உலோக சிருஷ்டிப்பு முதற்கொண்டு உங்களுக்கு தயார் செய்யப்பட்ட இராச்சியத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன், எனக்குப் பானங் கொடுத்தீர்கள். பரதேசியாயிருந்தேன், எனக்கு விடுதி கொடுத்தீர்கள். நான் வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் அளித்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள். சிறைச்சாலையிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்

கள்........சின்னஞ் சிறியவர்களாகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம், எனக்கே அதைச் செய்தீர்களென்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று திருவுளம்பற்றி, நம்மை மோட்சத்துக்கு அழைத்துச் செல்வார்.

---

## 8-ம் அதிகாரம்.

## மன்றாடுவோன்.

'மனிதன் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது சகலரும் அறிந்த சத்தியம். மனிதன் என்ன பிரயாசைப்பட்டபோதிலும், தெய்வத்துக்கு இஷ்டமில்லாவிடில், அவன் அனுகூலமடையாமல் தடுப்பது மகா எளிதே. ஆனால் சர்வ வல்லபருடைய கரம் ஒத்தாசை புரியுமாகில், மனிதன் எவ்வளவு பலவீனனானபோதிலும், அவன் அடையக்கூடாதகாரியம் யாதொன்றுமில்லை. சகலரும் இந்தச் சத்தியத்தை அறிந்திருந்தபோதிலும், தங்கள் அவசரங்களில், கடவுளுடைய ஒத்தாசையைக் கேட்டு மன்றாடுகிறவர்கள் எவ்வளவோ சொற்பப்பேர்! கனத்த நஷ்டம், தீராநோய், உயிர்ச்சேதம் முதலிய பெரிய ஆபத்துக்கள் நேரிடும் சமயத்தில், தங்கள் பலவீனத்தை உணர்ந்து, சர்வேசுரனை நோக்கிப் பிரார்த்திப்பவர்கள் பலருண்டு. ஆனால் அனுதினமும் உண்டாகும் ஆயிரக்கணக்கான சமயங்களில், பிள்ளையானது தன் தகப்பனை அண்டிப்போவதுபோல், பரமண்டலங்களிலுள்ள தங்கள் பரம பிதாவை நினைத்து மன்றாடிவரும் பழக்கமுள்ளவர்கள் எவ்வளவு சொற்பம்!



சேசுநாதர்சுவாமி தமது சீஷர்களுக்குக் கற்றுக் கொடுத்த பரமண்டலமந்திரத்தில், அன்றன்று வேண்டிய ஆகாரத்துக்காகவும் வேண்டிக்கொள்ளச் சொல்லுகிறார். 'இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்' என்று ஏவித் தூண்டுகிறார். 'கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று தைரியப்படுத்துகிறார். கேட்டும் கொஞ்சகாலமாக அடையாவிடில் மனம் சோராமல் திரும்பவும் திரும்பவும் கேட்க வேண்டுமென்று உவமைகளைக்கொண்டு போதிக்கிறார். திவ்விய ஆண்டவரின் இச்சுகிர்த போதனைகளை மனதில் தரித்து, அவருடைய நன் மாதிரியைக் கண்டு பாவிப்போமாக.

சேசுநாதர்சுவாமி ஜீவித்த முப்பத்துமூன்று வருஷங்களில், முப்பது வருஷகாலம் நசரேத்தூரில் மறைந்து ஜீவித்து வந்தார். இந் நீண்ட அந்தரங்க ஜீவியம் பிரசித்த ஜீவியத்துக்கு ஆயத்தமாயிருந்தது. நசரேத்தில் ஒவ்வொருநாளும் எவ்வளவு நேரம் ஜெபத்தியானத்தில் செலவழித்தார் என்று சுவிசேஷத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் தமது அனுதின அலுவல்களை நிறைவேற்றினபொழுது முதலாய், தமது திவ்விய பிதாவை மறவாமல், அவருடன் இடைவிடாமல் ஒன்றித்து ஜெபத்தியானத்தில் மூழ்கியிருந்தாரென்பது நிச்சயம்.

இத்தனை வருஷகாலமாய் தனியே மறைந்து தம்மைத் தயார் செய்தது போதாதென்றாற்போல், தமது பிரசித்த ஜீவியத்தைத் துவக்குமுன், நாற்பது நாள் பரியந்தம் வனாந்தரத்தில் தனியே உபவாசமாயிருந்து ஜெபம் செய்கிறார். நாடெங்கும் சென்று பிரசங்கங்கள் செய்து களைத்துப்போயிருக்கும் நாட்களில் முதலாய்,

ஜனங்களை அனுப்பியபின், மலையின் உச்சிவரையில் கஷ்டப்பட்டு ஏறி, இரவு முழுவதும் ஜெபத்தியானத்தில் செலவழிக்கிறார்.

ஆ! என்ன அதிசயம்! இப்படி நடப்பவர் யார்! இவர் சர்வேசுரனுடைய சுதனல்லவா! அவருடைய சொற்ப கிரியை முதலாய் அளவற்ற பலனுள்ளதாயிற்றே! ஆகிலும் ஜெபம் செய்வதில் என்ன பிரமாணிக்கம்! எவ்வளவு களைப்பாயிருந்தபோதிலும் கவனியாமல், கஷ்டப்பட்டு மலைமேல் ஏறி ஜெபம் செய்கிறார். தமது பரம பிதாவுக்குமுன் சாஷ்டாங்கதெண்டனிட்டு மன்றாடுகிறார்! என்ன சிரவணம்! என்ன வணக்கம்!

நீசப் பாவியாகிய நான் நடக்கும் விதமென்ன? எனக்குத் தேவையான வரங்கள் எத்தனையோ உண்டு. ஆகிலும் நான் வேண்டிக்கொள்ளும் சமயங்கள் எவ்வளவு சொற்பம்! ஜெபம் செய்வதென்றால், எவ்வளவு கசப்பாயிருக்கிறது! அதற்குத் தப்பித்துக்கொள்ள எத்தனை சாக்குப்போக்குகள்! ஜெபம் செய்யும்போது, என்ன வணக்கக்குறைவு, எத்தனை அனுசாரங்கள்! முழங்காலிலிருப்பதால் சரீரத்துக்கு யாதொரு வருத்தமுண்டாகாதபடி எத்தனை உபாயங்கள்! திவ்விய ஆண்டவரின் மாதிரியைக் கண்டு வெட்கி நாணக்கடவோம்.

நமது நேச ஆண்டவர் தமது ஜீவிய காலத்தில் யாதொரு முக்கியமான காரியத்தை நிறைவேற்றுமுன் தமது பிதாவினுடைய உதவியை மன்றாடித் துவக்குகிறார். தமது சீஷர்களில் பன்னிருவரை தமது திருச்சபையைப் பிற்காலத்தில் ஆளவேண்டிய அப்போஸ்தலர்களாகத் தெரிந்து கொள்ளவேண்டுமா? முந்தின நாள்



இரவு முழுதும் பர்வதத்தின்மேல் ஏறி ஜெபம் செய்கிறார். லாசாரைக் கல்லறையினின்று உயிர்ப்பித்து மகா பெரிய புதுமை செய்யப்போகிறாரா? தமது பிதாவை நோக்கி மன்றாடுகிறார். தமது மக்களுக்கு ஞான பெலனும் தென்பும் கொடுக்கவேண்டிய ஆத்தும போஜனமாகிய திவ்விய சற்பிரசாதத்தை உண்டுபண்ணுகிறாரா? தமது கண்களை வானத்தை நோக்கி உயர்த்தி மன்றாடுகிறார். நாமும் யாதொரு முக்கிய அலுவலைத் துவக்குமுன், சர்வேசுரனை அண்டி, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுத் துவக்குகிறோமோ? அவருடைய உதவியன்றி அணுவும் அசையுமோ? வீணே கலங்கி, கவலைப்படுவதில் போக்கும் நேரத்தை, திவ்விய ஆண்டவரின் உதவியை மன்றாடுவதில் செலவழித்தோமாகில், எவ்வளவு மன அமரிக்கையும் அதிக பிரயோஜனமும் உண்டாகும்!

அப்பங்களைப் புதுமையாகப் பலுகச்செய்து, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் போஜனமளித்தபோது, அவர்கள் வெகு சந்தோஷப்பட்டு, ஆண்டவரைத் தோத்தரித்து அவரைத் தங்கள் அரசனாக்கும்படி முயலுகிறார்கள். சேசுநாதர்சுவாமியோ, அவர்களைவிட்டு விலகி, மலையின்மேல் சென்று ஜெபம் செய்கிறார். நாமும் நாம் எண்ணியவாறு முடிந்து, உலகம் நம்மைப் போற்றிப் புகழும்போது, அகங்காரம், வீண் சிலாக்கியத்துக்கு இடங்கொடுத்து மதி மயங்கிப்போகாமல், தனியே ஒதுங்கி சகல நன்மைகளுக்கும் ஊற்றும் ஊறணியுமாகிய சர்வாதி கர்த்தருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் புரியவேண்டுமென்று கர்த்தர் கற்பிக்கத் திருவுளமானார்.

யூதர்கள் கையில் அகப்பட்டுப் பாடுபடுமுன், பூங்காவனத்திற்குச் சென்று, சாஷ்டாங்கமாக விழுந்து,

பிரார்த்திக்கிறார். துக்கமும் சஞ்சலமும் வேதனையும் நிறைந்த இச்சமயத்திலும் ஜெபத்தைக் கைவிடவில்லை. வேறு வார்த்தைகள் தேடுவதில் நேரத்தைப் போக்காமல், அதே வாக்கியத்தைத் திரும்பவும் திரும்பவும் உரைத்து, மும்முறை மன்றாடுகிறார். சோதனையில் பிரவேசியாதபடி, விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள் என்று சொல்லி, தமது அப்போஸ்தலர்களையும் வேண்டிக் கொள்ளத் தூண்டுகிறார். சிலுவையில் அறையுண்டு, கொடிய வேதனைகள் அனுபவிக்கும்போது முதலாய், தமது சத்துராதிகளுக்காகப் பிரார்த்திக்கிறார். "பிதாவே! இவர்களை மன்னித்துக்கொள்ளும். ஏனெனில் இவர்கள் செய்வது இன்னதென்று அறியார்கள்" என்கிறார். கடைசி ஜெபமாக "பிதாவே! உம்முடைய கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று சொல்லி உயிர் விடுகிறார். துன்ப வருத்தங்கள் வரும்போது ஜெபத்தைக் கைவிட்டு, சுற்றியுள்ளவர்கள் மேல் சீறிவிழுந்து, தேவ பராமரிக்கையைப்பற்றி முறுமுறுத்து, பிறரையும் நம்மையும் நிர்ப்பாக்கியராக்கிக் கொள்ளும் நமக்கும், சர்வேசுரனுடைய சித்தத்துக்கு அமைந்து கடைசிபரியந்தம் பிறர்சிநேகத்தை உத்தம பிரகாரம் அனுசரித்து, உயிர்பிரியுமட்டும் ஜெபித்து மரிக்கும் சேசுநாதர்சுவாமிக்கும் எவ்வளவு பாரதூர வித்தியாசம்! பூங்காவனத்தில் அவர் மன்றாடியதுபோல், நாமும், எவ்வளவு அதிக துன்ப துயரங்கள் வருகின்றனவோ, அவ்வளவுக்கு அதிக பிரமாணிக்கத்துடனும் விடா முயற்சியுடனும் மன்றாடுவோமாக.

மோட்சத்திலும் சேசுநாதர்சுவாமி நமக்காக இடைவிடாமல் மன்றாடிக்கொண்டிருக்கிறார். தமது பிதாவின் வலதுபாரிசத்தில் மகிமைப்பிரதாபத்தோடு வீற்றிருக்



கும் நமது நேச ஆண்டவர் இக்கண்ணீர்க் கணவாயிலுள்ள தமது மக்களை மறக்கவில்லை. அவர்கள் படும் துன்ப வருத்தங்கள், தரித்திரம், வேதனைகளையெல்லாம் தாமே தமது ஜீவியகாலத்தில் பட்டு அனுபவிக்கத் திருவுளமானார். ஆதலால் அவைகளையெல்லாம் அனுபவத்தினாலே அறிந்திருக்கிறார். நாம் சர்வேசுரனை நோக்கி, நமக்கு உதவிபுரியும்படி மன்றாடுகையில், சேசுநாதர்சுவாமியும் நம்மோடுகூட பிதாவை நோக்கி மன்றாடி, தமது ஐந்து திருக்காயங்களைக் காண்பித்து, தாம் பட்ட பாடுகளைக் குறித்து, தமது மக்களின் மன்றாட்டுக்களைக் கேட்டருளும்படி பிதாவினிடம் நமக்காக மனுப்பேசுகிறார். அளவில்லாத நித்திய நேசத்துடன் சிநேகிக்கும் தமது ஏக குமாரனின், மன்றாட்டை, பிதாவாகிய சர்வேசுரன் தள்ளிவிடுதல் கூடுமான காரியமோ?

முற்காலத்தில் சோதோம் என்னும் பட்டணத்தை அழிக்காதபடி அபிரகாம் பிரார்த்தித்தபோது, அங்கே பத்து நீதிமான்களாவது இருந்தால் அழிப்பதில்லை என்று சர்வேசுரன் வாக்களித்தார். ஆனால் பத்து நீதிமான்கள் முதலாய் இல்லாததால், அழிக்கப்பட்டது. இஸ்ராயேலித்தார் சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கம் தவறி நடந்தபோது, பலமுறை அவர்கள்மேல் தேவ கோபாக்கினை விழாதபடி மோயீசன் மன்றாடித் தடுத்தார். அபிராகாம், மோயீசனுடைய மன்றாட்டுகளைவிட, நமது மன்றாட்டுகளை அதிக வல்லபமுள்ளதாக்கக்கூடியதொன்று நமது கையிலுண்டு. அது திவ்விய நற்கருணையே. திவ்விய நன்மை வாங்கி, நமது இருதயத்தில் சேசுநாதர்சுவாமி எழுந்தருளி வந்திருக்கையில், இதோ உமது திருக்குமாரன், எங்கள் பாவாக்கிரமங்களைக் கண்ணோக்காமல்,

உமது நேச திருக்குமாரன் முகத்தைக்குறித்து இன்னின்ன மன்றாட்டை அளித்தருளும் என்று வேண்டிக்கொண்டால், இப்பேர்ப்பட்ட உருக்கமான வேண்டுதலைப் புறக்கணிக்க, பிதாவாகிய சர்வேசுரனுக்கு மனம் வருமா?

ஆம், இதெல்லாம் மெய்தான், ஆனால் நான் என்ன விஷயங்களுக்காக வேண்டிக்கொள்ளவேண்டும், என்பாயோ. உன் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் தேவையான வரங்களொன்றுமில்லையா? இலௌகீக காரியங்களில் உனக்குக் கவலை உண்டாக்குபவைகளும், ஞான சீவியத்தில் தடங்கலாயிருக்கும் ஆசாபாசங்கள், சோதனைகள் ஆபத்துகளுமில்லையா? இவைகளில் உதவிபுரியும்படி மன்றாடு. மேலும், உனக்குத் தாய் தகப்பன், சகோதரர் சகோதரிகள், பந்து மித்திரர் உபகாரிகள் ஒருவருமில்லையா? இவர்களுடைய சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் அவசியமான வரங்கள் யாதொன்றுமில்லையா? இவைகளுக்காகவும் மன்றாடு. உலகத்தில் எத்தனையோ ஆத்துமங்கள் பாவச்சேற்றிலும் அஞ்ஞான அந்தகாரத்திலும் அமிழ்ந்திருக்கின்றன! தினந்தோறும் எத்தனையோபேர் சாவான பாவத்துடன் மரிக்குந்தறுவாயிலிருக்கிறார்கள்! உத்தரிக்கிற ஸ்தலத்தில் எத்தனையோ ஆத்துமங்கள் உன் ஜெபங்களால் மீட்கப்படும்படி காத்துக்கொண்டிருக்கின்றன! இவர்களுக்காகவும் மன்றாடு. திரு இருதயத்தையும் அதின் நேசத்தையும் அறியாதவர்கள் எத்தனையோ பேர்! அதற்கு தினந்தோறும் நிந்தை அவமானங்கள் வருவித்து ஜீவிக்கிறவர்கள் எத்தனையோ பேர்! ஆதலால் திரு இருதய இராச்சியமானது நாளுக்குநாள் பரம்பி, அதை சகலரும் அறிந்து நேசிக்கும்படி மன்றாடு.



சேசுவின் திரு இருதயம் இவ்வுலகத்தில் ஜீவித்தது போல், நீயும் எப்போதும் சர்வேசுரனுடன் ஒன்றித்து, இடைவிடாமல் ஜெபம் செய்துவரப் பிரயாசப்படு. வாய் ஜெபம் மாத்திரம் ஜெபமல்ல. உன் கிரியைகளையும் நீ படும் துன்ப வருத்தங்களையும் ஜெபங்களாக மாற்றி ஒப்புக்கொடுக்கலாம். விடியற்காலமே கண் விழித்தவுடன், அல்லது திவ்விய பூசை காணும்போது, தினந்தோறும் ஜெப அப்போஸ்தல சபை ஜெபத்தைச் சொல்லத் தவறாதே. இவ்விதம் உன் ஜெபங்களையும் கிரியைகளையும் நீ படும் துன்ப வருத்தங்களையும் சேசுவின் திரு இருதயத்திற்கு அர்ச். மரியாயின் மாசற்ற திரு இருதயத்தின் மூலமாய் காலையில் ஒப்புக்கொடுத்த பின், இந்தப் பத்தி முயற்சியை நாள் முழுவதும் பற்பல வேலைகள் செய்துகொண்டிருக்கையில் பலமுறை புதுப்பித்துவா. காலை ஜெபத்தை முழுவதும் திரும்பவும் சொல்வது அவசியமில்லை. சமயாசமயம் வானத்தை நோக்கிக் கண்களைப் பத்தியுடன் உயர்த்துதல், நீ இருக்கும் அறையிலுள்ள திரு இருதயப் படம், பாடுபட்ட சுரூபம் முதலியவைகளைக் கண்ணோக்குதல், திவ்யநற்கருணைப் பெட்டியை நோக்கிக் கண்களைச் செலுத்துதல், சிறு மனவல்லய ஜெபங்கள் சொல்லுதல், இவை முதலிய பத்திக்கிருத்தியங்களால் நாள் முழுவதும் செய்யும் சகலத்தையும் இடைவிடாத ஜெபமாக மாற்றிவிடலாம். இவ்விதமாக திரு இருதயத்துடன் ஒன்றித்து, திரு இருதயத்தைப் போல் இடைவிடாமல் ஜெபம் செய்துவரும் பழக்கத்தை அடையப் பிரயாசப்படு. இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்து, அதின்படி நடப்பவனே பாக்கியவான்.

## 9-ம் அதிகாரம்.

# ஆத்தும இரட்சண்ய ஆவலுள்ளோன்.

சேசுநாதர்சுவாமி பட்ட பாடுகளின் பலன்கள் அளவற்றவை. அவருடைய திரு இரத்தத்தின் ஒரு துளி முதலாய், இவ்வுலகத்தையும் இதைப்போன்ற கோடா கோடி உலகங்களையும் இரட்சிக்கப்போதும். இப்பேர்ப்பட்ட அளவற்ற பலன்களின் பொக்கிஷம் தயாராயிருந்தும், அனேகர் ஆத்தும இரட்சண்ணியம் அடையாமற் போவதெப்படி? சர்வேசுரன் மனிதனைச் சுயாதீன மனதுடன் உண்டாக்கியருளினார். இந்தச் சுயாதீனத்துக்கு விரோதமாய் அவனைப் பலவந்தப்படுத்தி, மோட்சத்துக்குக் கொண்டுபோக அவருக்கு மனமில்லை. மனிதன் பூரண சுயாதீனத்தோடு, சர்வேசுரனைத் தூர தள்ளிவிட்டு அவர் கட்டளைகளை மீறி, அழிந்துபோகும் நிலையற்ற இக லோக சுக சந்தோஷங்களைத் தேடித் திரிவதால், தன் ஆத்துமத்தைப் போக்கடிக்கிறான். இப்படிப் புத்தியீனமாய் நடக்கும் மனிதனின் மனதை இளக்கி, அவனை சன்மார்க்கத்துக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான வரப்பிரசாதங்களை அவனுக்கு சர்வேசுரனிடமிருந்து மன்றாடி அடைவதற்கும், தக்க சமயத்தில் அவனுக்கு நற்புத்தி சொல்லவும், தாய் தகப்பன், உறவினர் சிநேகிதர், உபாத்திமார் உபதேசிமார், கன்னியர்கள் குருக்கள் முதலிய பற்பல மனிதரை சர்வேசுரன் உதவிக்கொள்ளுகிறார். இவ்



விதம் நமது சகோதரராகிய மனிதரை இரட்சிக்க, நீச மனிதராகிய நமது ஒத்தாசையை ஏற்றுக்கொள்ளத் திருவுளமானது சர்வேசுரனுடைய கிருபாகடாட்சமே. ஆத்துமங்களை இரட்சிக்கும் அலுவலைவிட, வேறு சிறந்த அலுவல் யாது? அதுவே மனுஷாவதாரமான சுதனாகிய சர்வேசுரனின் அலுவல்! இப்பேர்ப்பட்ட உன்னத அலுவலில் எவ்வளவாகிலும் நாமும் நமது திவ்விய ஆண்டவருடன் கூடி உழைத்து, அவருடைய திருப்பாடுகளின் அளவற்ற பேறுபலன்களை அனேகானேகர் அடையும்படி உதவி புரிவது எவ்வளவோ பெருமைக்குரிய அலுவல்!

மேலும் திவ்விய ஆண்டவர் நமக்காக தமது திரு இரத்தத்தைச் சிந்தி உயிரைப் பலியாக்கினதற்காகவும், நமதுபேரில் கணக்கில்லாத அரிய பெரிய சகாயங்களைப் பொழிந்திருப்பதற்காகவும், நாம் நன்றியறிதல் செலுத்த வேண்டாமா? சகல மனிதரையும் இரட்சிக்க, அவருடைய திவ்விய இருதயத்தில் பற்றியெரியும் ஆவலை நாமும் உணர்ந்து, பிறர் ஆத்தும இரட்சண்ணியத்திற்கு நம்மாலான உதவி புரிவதைக்காட்டிலும், நமது நன்றியைக் காட்ட வேறு சிறந்த வழி என்ன உண்டு?

இதோ, நம்மைச்சுற்றிலும் ஜீவிக்கும் மனிதரை சற்றே கண்ணோக்குவோமாகில், எத்தனை கோடிக்கணக்கான இந்தியர் அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கி, இரட்சண்ணிய வழியைவிட்டு விலகியிருக்கின்றனர்! இவர்கள் எல்லோரையும் இரட்சித்து ஈடேற்றுவதற்கு, சேசுநாதர்சுவாமி பாடுபடவில்லையா? இவர்களுக்காக அவர் தமது விலைமதியாத திரு இரத்தத்தைச் சிந்தவில்லையா? மெய்யாகவே இவர்களின் ஆத்துமங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று ஆண்டவர் ஆசிக்கிறார். ஆனால் இவர்கள் மனச்சுயா

ஹீனத்தை நீக்கி பலவந்தப்படுத்தாமல், நமது மன்றாட்டுகளாலும் பிரயாசைகளாலும் இவர்களை இரட்சண்ணிய பாதைக்குக் கொண்டுவர விரும்புகிறார். ஆனால் இத்தனை கோடிக்கணக்கான அஞ்ஞானிகளுக்குள்ளே சத்தியவேதத்தை அறியும் சொல்லொண்ணா பாக்கியம்பெற்ற நாம், நமது நிர்ப்பாக்கிய தேசத்தாருடைய மனந்திரும்புதலைப் பற்றி கொண்டிருக்கும் ஆவல் எப்போர்ப்பட்டது? நமது தேசத்தாரின் மனந்திரும்புதலுக்காக எப்போதாவது நாம் மன்றாடுவதுண்டா? நம்முடன் புழங்கும் இதர மதஸ்தருக்கு நாம் சமயோஜிதமாய்ப் புரியும் ஞான உதவி ஒத்தாசைகள் எவை? இவையெல்லாம் நமது தேசத்தார் மட்டில் நமக்குள்ள முக்கிய கடமையல்லவா? கண்ணில்லாக் கபோதி யொருவன் படுகுழியில் தவறி விழுவதைப் பார்க்க சகியாத நாம், இத்தனை கோடிக்கணக்கானபேர் அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கியிருப்பதைக் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கலாமா? நமது மன்றாட்டினாலும் பிரயாசையினாலும் இந்திய தேசமானது கொஞ்சங் கொஞ்சமாக மாறி, ஓர் காலம் முழுவதும் சத்தியவேத நாடாகக்கூடுமாகில், இது எவ்வளவோ பெரிய பாக்கியமாகும்!

அஞ்ஞானிகளின் மனந்திரும்புதலைப்பற்றிப் பேசுவானேன்? சத்தியவேதத்தில் உட்படும் பாக்கியம்பெற்றவர்களுக்குள்ளே முதலாய் எத்தனையோபேர் பூசை பாவசங்கீர்த்தனம் திவ்வியநன்மை முதலியவையின்றி, இரட்சண்ணிய வழியைவிட்டு விலகி நடந்து வருகிறார்கள்! இவர்களை மனந்திருப்பப் பிரயாசப்படுவதும் ஆத்தும இரட்சண்ணிய அலுவலே. பாவிகளை மனந்திருப்புவதற்குள் பற்பல வழிகளுள் திரு இருதய அலுவலை நிறைவேற்றுகிறவன் கையாடத்தகுந்தது திரு இருதயப்



பத்தியே. இந்தப் பத்தி எவ்வித பாவியின் மனதையும் இளக்கி, தன் வசமாக்கக்கூடியது. இது விஷயத்தைப் பற்றி திரு இருதயமே பற்பல தடவைகளில் வாக்குத்தத்தம் அளித்திருக்கின்றது. ஆதலால் திரு இருதயப் பத்தியைப் பரப்பி, அதின் மூலமாய் ஆத்தும இரட்சண்ணிய வேலை நிறைவேறும்படி உதவி புரிவதே நமது கடமையாகும்.

ஆத்தும இரட்சண்ணிய ஆவலுள்ளவனிடம் விளங்கவேண்டிய குணாதிசயங்கள் என்ன? திவ்விய ஆண்டவரே இது காரியத்தில் நமக்கு மாதிரிகை.

சேசுநாதர்சுவாமி தமது ஜீவியகால முழுவதும் ஆத்தும இரட்சண்ணியத்துக்காக செலவழித்து கடைசியாய் உலகத்தின் இரட்சண்ணியத்துக்காகத் தம்மைத்தாமே பலியாக்கினார். நாமும் நமதாத்தும இரட்சண்ணியமும் பிறர் ஆத்தும இரட்சண்ணியமுமே இவ்வுலகத்திலுள்ள சகல காரியங்களிலும் அதிமுக்கியமானவை என்பதை மனதில் ஆழமாய் உணர்ந்து, எந்த நேரமும் இதை மறவாமல், நம்மால் கூடிய அளவில் நம்மையும் பிறரையும் சாங்கோபாங்கத்தில் வர்த்திக்கச் செய்வோமாக.

திவ்விய ஆண்டவர் ஆத்தும இரட்சண்ணியத்துக்காக மகா சுத்த கருத்துடன் உழைத்தார். ஏழையென்றும் ஆஸ்திக்காரனென்றும், பட்டணமென்றும் பட்டிக்காடென்றும், நீதிமானென்றும் பாவியென்றும், வித்தியாசம் பார்க்கவில்லை. சரியாய்ச் சொல்லவேண்டுமானால், ஏழைகளையும் பாவிகளையும், வியாதிக்காரர்களையும், எவ்வித நிர்ப்பாக்கியமுள்ளவர்களையும் அதிக ஆவலுடன் தேடிச்சென்றார். தமக்கு மகிமை பெருமை வருவிக்கக்

கூடிய சமயங்களை நீக்கி நடந்து, ஜனங்கள் தம்மை அரசனாக்கத் தேடியபோது, அவர்களைவிட்டு விலகிச்சென்றார். துன்ப வருத்தங்களில் தமக்கு ஆறுதலாயிருக்கக்கூடிய தமது திருத்தாயாரை விட்டுப்பிரிந்து, நாகரீகமும் கல்வியறிவுமில்லாத ஏழைச் செம்படவர்களுடனும், சதித்துரோகியாவாரென்று திவ்விய ஞானத்தால் ஏற்கனவே அறிந்திருந்த யூதாசுடனும், மூன்று வருஷகாலம் மகா அன்பு தயாளத்துடன் பழக அவர் மனங்கூசவில்லை. நாமும், பிறர் நம்மைப் புகழ்ந்து பேசும்படியாகவும், நமக்கு வரக்கூடிய இதர இலௌகீக நன்மைகளுக்காகவும் உழைக்காமல், சுத்த கருத்துடனே ஏழைகளென்றும் பணக்காரரென்றும், உயர்ந்த ஜாதியாரென்றும் தாழ்ந்த ஜாதியாரென்றும், வித்தியாசம் பாராமல், சகல ஆத்துமங்களும் நமதாண்டவரின் விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தின் கிரயத்தால் இரட்சிக்கப்பட்டவை என்பதை உணர்ந்து உழைக்கவேண்டும்.

சேசுநாதர்சுவாமி கள்ள ஞானிகளான பரிசேயரையும், தேவாலயத்தை அவசங்கைப்படுத்தினவர்களையும் கண்டித்துத் தண்டித்தார். ஆனால் நிற்பாக்கிய பாவிகள் மட்டில் வெகு இரக்கமாயிருந்தார். தமது போதனைகளை சரிவரக் கண்டுபிடியாத சீஷர்களுக்கு வெகு பொறுமையோடும் தயாளத்தோடும் போதித்து வந்தார். தம்மை நிந்தித்து துன்பப்படுத்தினவர்களுக்கு, செம்மறியாட்டுக் குட்டியைப்போல் அமரிக்கையாயிருந்தார். ஆத்தும இரட்சண்ணிய அலுவலில் எப்போது சாந்தகுணம் அமரிக்கை அனுசரிக்கவேண்டுமென்றும், எப்போது கண்டித்துத் தண்டிக்கவேண்டுமென்றும் நமது திவ்விய மாதிரிகையாகிய சேசுவினிடம் கற்றுக்கொள்வோமாக.



ஆத்துமங்களை இரட்சிக்க வெறும் ஆவல் மாத்திரம் கொண்டிருப்பது போதாது. சேசுநாதர்சுவாமி நாள் முழுவதும் பட்டணம் பட்டிகளிலெல்லாம் சுற்றித்திரிந்து இரவை ஜெபத்தில் செலவழித்து, வெகு கஷ்டப்பட்டார். சொல்லொண்ணா வேதனைகள் அனுபவித்து, சிலுவையில் அறையுண்டு மரித்தார். நாமும், ஆத்துமாக்களின் இரட்சண்ணியத்துக்காக, நமது இளைப்பாற்றி சுக சௌக்கியங்களில் நம்மை ஒறுத்து, பிறருடைய ஆத்துமங்களுக்காக கொஞ்சமாகிலும் கஷ்ட துன்பங்கள் அனுபவிக்க தயாராயிருக்கவேண்டும். மேலும் நாம் துவக்கிய கருமங்கள் உடனே அனுகூலமடையாவிடில், அவதைரியப்படாமல், நாம் கண்ணீருடன் விதைத்ததை பின்னொருகாலத்தில் மற்றவர்கள் சந்தோஷத்துடன் அறுப்பார்கள் என்று ஆறுதலடையக்கடவோம். யார் பலனை அறுத்தபோதிலும், சகலமும் அறிந்துள்ள சர்வேசுரன் அவரவருக்குரிய பங்கை ஒருக்காலும் மறவார்.

சிலர், "ஆம் ஆத்தும இரட்சண்ணிய ஆவலுள்ளவனிடம் விளங்கவேண்டிய குணாதிசயங்கள் எப்பேர்ப்பட்டவை என்று தெரிகிறது. ஆனால் நான் குருவுமல்ல, உபதேசியுமல்ல, நான் பாரி குடும்பஸ்தன், எனக்குரிய வேலை அலுவலுண்டு. இதையெல்லாம் கவனியாமல் விட்டுவிட்டு, ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்ய எனக்கு சகவாசமுமில்லை, சாமர்த்தியமுமில்லை," என்று சொல்லக்கூடும்.

இவர்கள் சொல்வது நியாயமே. தன் குடும்பக் கடமைகளைக் கைநெகிழ்ந்து, தனது வேலை அலுவலைக் கெடுத்துக்கொண்டு, பிறருக்குப் பிரசங்கம் செய்யச் சொன்னால், இது யுக்தமன்று. சர்வேசுரன் கேட்பது யாதெனில், நாமிருக்கும் அந்தஸ்துக்கேற்றபடி, அவருக்காக

உழைக்கவேண்டுமென்பதே. மெய்யான ஆத்தும இரட்சண்ணிய ஆவல்கொண்டிருப்பவனுக்கு இந்த ஆசையை நிறைவேற்றுவதற்குள்ள வழிகளை எடுத்துக்காட்டுவது அவசியமில்லை.

அப்படியே, பிறர் ஆத்தும இரட்சண்ணியத்துக்காக அடிக்கடி உருக்கத்துடன் மன்றாடுவது சகலரும் செய்யக்கூடிய காரியம். இந்தியாவின் மனந்திரும்புதலுக்காக அர்ச். சவேரியார் சொல்லிவந்த ஜெபமும், வேறு நேர்த்தியான ஜெபங்களுமுண்டு. இவைகளை நாம் ஒவ்வொரு நாளும் சொல்லிவருவதற்கு விக்கினமென்ன உண்டு? ஒவ்வொருநாளும் நாம் செய்யும் கிரியைகளையும் படும் துன்ப வருத்தங்களையும் ஆத்துமாக்கள் இரட்சண்ணியம் அடையும்படி ஒப்புக்கொடுப்பதும் சகலரும் செய்யக்கூடியது. நாம் நல்ல கிறீஸ்துவர்களாய் ஜீவித்து வந்தோமாகில், நமது நன்மாதிரிகையும் பிறர் ஈடேற்றத்துக்கு பலமான ஒத்தாசையாகும். மேலும் நமது குடும்பத்திலுள்ளவர்கள், நம்முடன் வேலை செய்கிறவர்கள், உறவினர், சினேகிதர், ஊழியர்கள் முதலியவர்களுடன் புழங்கும்போது, இங்குமங்கும் தக்கசமயத்தில் ஓர் நல்ல வார்த்தை சொல்வதாலும், யாதொரு பிறர் சினேகக் கிரியை புரிவதாலும், வேறு பற்பல வகையிலும் எத்தனையோ ஆத்தும இரட்சண்ணியத்துக்கு உதவி புரியக்கூடும்!

திரு இருதயத்தைக்குறித்து இந்த அலுவலைச்செய்ய ஆசிப்பவன், திரு இருதயப் பத்தியைப் பரப்பி, அதின் மூலமாய் ஆத்துமங்களின் ஈடேற்றத்துக்காக உழைக்க வேண்டும். திரு இருதயப் பத்தியைப்பற்றி எனக்குப் பிரசங்கிக்கத் தெரியாது, என்பாயோ? பாதகமில்லை. வேறு எத்தனையோ வழிகளுண்டு. திரு இருதயத்தைப்



பற்றிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் பிறர் வாசித்தறியும்படி நீ செய்யமுடியாதா? திரு இருதயப் படங்கள், சுரூபங்கள், உத்தரீயங்கள் முதலியவைகளைக் கொடுத்து, மற்றவர்கள் இவைகளைப் பிரயோகிக்கும்படி செய்வது கஷ்டமா? திரு இருதய மனவல்லயச் செபங்களை உன் பிள்ளைகளுக்கும் உனக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் கற்பித்து, அவைகளை அடிக்கடி சொல்லும்படி பழக்குவது அவ்வளவு பிரயாசையான காரியமா? பரிகாரமுயற்சிகள் செய்தல், பரிகாரநன்மை வாங்குதல், தலை வெள்ளிக்கிழமைப் பத்தி அனுசரித்தல், திரு இருதய சபையில் உட்படுதல் இவை முதலியவைகளை உன் குடும்பத்தாருக்குள்ளேயும், தக்க சமயம் வாய்க்கும்போது உன் ஊராருக்குள்ளேயும் ஏற்படுத்துவதற்கு வெகு பிரயாசை தேவையா?

“மனமுண்டேல் வழியுண்டு” திரு இருதயத்தின் பேரிலும் உன் சகோதரருடைய ஆத்துமங்களின்பேரிலும் மெய்யான சினேகப்பற்றுதல் உன்னிடம் பற்றியெரிந்தால், திரு இருதயப் பத்தியை உன்னைச் சுற்றி எங்கும் பரப்பி, பிறருக்கு நன்மை புரிவதற்கு உனக்கு வழிகளும் வகைகளும் எடுத்துரைப்பது அவசியமன்று. திரு இருதயத்தை உன் முழு இருதயத்துடனும் நேசி. திரு இருதயத்தைக் குறித்து உன் சகோதரரையும் நேசி. இதினால் உன்னையும் இரட்சித்துக்கொள்வாய், உன் மன்றாட்டுகளாலும் பிரயாசைகளாலும் மற்றனேகரையும் மோட்சக்கரை கொண்டுவந்து சேர்ப்பாய்.




# ஜெபங்கள்.

## சேசுநாதருடைய திரு இருதயத்துக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுக்குஞ் செபம்.

(முத். மார்கரீத் மரியம்மாள்.)

சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு அடியேன் (இன்னான்) என்னை முழுதும் கையளித்து ஒப்புக்கொடுக்கிறேன். என்னிலுள்ளதும் எனக்குள்ளதுமான சகலமும் அத்திரு இருதயத்தையே சிநேகித்து ஸ்துதித்து வணங்கும்படியாக என்னையும் என் சீவன் உயிரையும், என் கிரிகைகள் முதல் எனக்குவரும் துன்ப வருத்தங்கள் சகலமும் அத்திரு இருதயத்துக்குப் பாதகாணிக்கையாக வைக்கிறேன். திவ்விய இருதயத்துக்கு முழுதும் சொந்தமாயிருப்பதும், அதற்கு மனத்தாங்கல் வருவிக்கக்கூடிய சகலத்தையும் என் முழுமனதோடு அருவருத்துத் தள்ளி, அத்திரு இருதயத்தின்மட்டில் எனக்குள்ள சிநேகத்தைக் காண்பிக்கச் சகலமும் செய்வேனென்பதும் இதுவே சற்றும் மாறாத என் தீர்மானமாமே.



ஓ! மதுரமான சேசுவின் திரு இருதயமே! இனிமேலாக நீரே, என் சிநேகத்துக்கெல்லாம் முற்றும் உரியவர். நீரே, என் உயிரின் ஏககாவல். எனது இரட்சண்ணியத்தின் தளராத நம்பிக்கை நீரே. நீரே என் பலவீனத்தைத் தாங்கும் ஔஷதம். என் சீவிய நாட்களில் நான் செய்த குற்றங் குறைகளைப் பரிகரிப்பவர் நீரே. நீரே என் உயிர் பிரியும் வேளையில் எனக்கு ஸ்திரமான அடைக்கலம். ஓ! தயாளம் நிறைந்த சேசுவின் திரு இருதயமே! உமது பிதாவின் சமுகத்தில் நீரே எனக்காக மன்றாடி, அவருடைய நீதியின் கோபாக்கினை என்மேல் விழாதபடி தடுத்தருளும். ஓ! சிநேகப்பிரளயமான சேசுவின் திரு இருதயமே! என் பலவீனத்தைப் பார்க்கையில் எனக்கு முற்றும் பயமும், உமது தயாளத்தை நினைக்கையில் எனக்கு முழு நம்பிக்கையும் வருவதினாலே என் நம்பிக்கை யாவும் உமதுபேரில் வைக்கிறேன்.

ஆனதினால் உமக்குப் பிரியமற்றதும் விரோதமுமானதும் எதுவும் என்னிடத்திலிருந்தால் அதை உமது சிநேக அக்கினியினாலே சுட்டெரித்தருளும். நான் உம்மை என்றும் மறவாமலும் உம்மைவிட்டு என்றும் பிரியாமலும் இருக்கும்படி உமது தூய சிநேகத்தை என் இருதயத்தில் பதிப்பித்தருளும். நான் உமது சொந்த அடிமையாகச் சீவிப்பதும் சாவதுமே என் சர்வ பாக்கியமாகச் செய்ய ஆசிப்பதினாலே, என் பெயரை உமது திரு இருதயத்தில் எழுதிவைத்தருளுவீரென்று உமது தயாள இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறேன் சுவாமி, ஆமென் சேசு.

### சேசுநாதருடைய திரு இருதயத்துக்குத் தங்கள் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கிற செபம்.

சேசுவின் திரு இருதயமே! கிறீஸ்துவக் குடும்பங்களுக்குத் தேவரீர் செய்துவருஞ் சகல உபகாரங்களையும், சொல்ல முடியாத உமது நன்மைத்தனத்தையும் நினைத்து நன்றியறிந்த பக்ஷத்தோடு உமது திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம்.

நேசமுள்ள சேசுவே! எங்கள் குடும்பங்களிலுள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவரீர் எங்களை ஆசீர்வதித்து, இப்போதும் எப்போதும் உமது திருஇருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும்.

தவறி எங்களில் எவனாவது உமது திரு இருதயத்தை நோகச்செய்திருந்தால், அவன் குற்றத்துக்கு நாங்களே நிந்தைப்பரிகாரஞ் செய்கிறோம்; உமது திரு இருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவனுக்கு கிருபை செய்தருளும்.

இதுவுமன்றி உலகத்திலிருக்கும் சகல குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். பலவீனர்களுக்கு பலமும், விருத்தாப்பியருக்கு ஊன்றுகோலும், விதவைகளுக்கு ஆதரவும், அநாதப்பிள்ளைகளுக்குத் தஞ்சமுமாயிருக்கத் தயைபுரியும். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள், அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டில் தேவரீர் தாமே விழித்துக் காத்திருப்பீராக.

சேசுவின் இரக்கமுள்ள திரு இருதயமே! சிறுபிள்ளைகளை நீர் எவ்வளவோ பட்சத்தோடு நேசித்தீரோ. இந்த விசாரணையிலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை ஆசீர்வதியும். அவர்களு-



டைய இருதயத்தில் விசுவாசத்தையுந் தெய்வ பயத்தையும் வளரச்செய்யும். சீவிய காலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும், மரணசமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

திவ்விய சேசுவே! முறை முறையாய் உமது திருச்சிநேகத்தில் சீவித்து மரித்து நித்தியகாலமும் எங்கள் குடும்ப முழுவதும் உம்மோடு இளைப்பாறக் கிருபை புரிந்தருளும். ஆமென் சேசு.

---

### சேசுநாதருடைய திரு இருதயத்துக்கு உலக முழுவதையும் ஒப்புக்கொடுக்கும்படி அர்ச். பாப்பு ஏற்படுத்திய செபம்.

ஓ! மிகவும் மதுரம் நிறைந்த சேசுவே! மனுக்குலத்தின் இரட்சகரே! உமது பீடத்தின் முன்பாக மகா தாழ்ச்சி விநயத்துடன் சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்கும் அடியோர்கள்மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுஞ் சுவாமீ! நாங்கள் தேவரீருக்குச் சொந்தமானவர்கள், உமக்குச் சொந்தமாகவே நாங்களிருக்கும்படி ஆசையாயிருக்கிறோம். தேவரீரோடு இன்னும் அதிக ஸ்திரமாய் நாங்கள் ஒன்றித்திருக்கத்தக்கதாக நாங்கள் ஒவ்வொருவரும், எங்கள் மனசார எங்களை முழுதும் இன்றைக்கு உம்முடைய இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம் சுவாமி.

சுவாமி! மனிதர்களுக்குள்ளே பெரும்பங்கான அநேகம் பேர்கள் தேவரீரை ஒருபோதும் அறிந்ததே இல்லை. வேறே அநேகம் பேர்கள் உம்முடைய கற்பனைகளை நிந்தித்து, உம்மைப் பழித்து வேண்டாமென்று தள்ளிப்

போட்டார்கள். ஓ! மகா தயாளம் நிறைந்த சேசுவே! உம்மை இன்னம் அறியாதவர்கள்பேரிலும் உம்மை அறிந்தும், நிந்திக்கிறவர்கள்பேரிலும் இரக்கமாயிரும். இவர்கள் எல்லாரையும் உமது திரு இருதயத்தின்கிட்ட சிநேக பந்தனங்களால் இழுத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! உம்மைவிட்டு ஒருபோதும் பிரியாமல் என்றும் பிரமாணிக்கமாயிருக்கும் விசுவாசிகளான கிறீஸ்துவர்கள்பேரில் தயவாயிரும். விசேஷமாய் உம்மை விரோதித்துப்போன ஊதாரிப் பிள்ளைகள்பேரிலும் இரக்கமாயிரும். இவர்கள் எல்லாரும் பசியினலுந் துன்பத்தாலும் வருந்திக் கெட்டுப்போகாதபடி தங்கள் தகப்பன் வீட்டுக்குச் சீக்கிரத்தில் வந்து சேரும்படி கிருபை செய்வீராக.

அபத்தப் பொய்களால் வழிதப்பிப் பிசகிப்போயிருக்கிறவர்களுக்கும், விரோதத்தால் பிரிந்திருக்கிறவர்களுக்கும் தேவரீர் இராஜாவாய் இருப்பீராக. இவர்கள் எல்லாரையும் சத்தியத்தின் துறைமுகத்திற்கும், விசுவாசத்தின் ஒற்றுமைக்கும் அழைத்துக் கூட்டிச் சேர்த்தருளும் சுவாமி. அப்போது எல்லாருக்கும் ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும். கடைசியாய் அஞ்ஞானத்தின் முதிர்ந்த குருட்டாட்டத்தில் அமிழ்ந்தியிருக்கும் ஜனங்களுக்கும் தேவரீர் இராஜாவாய் இருப்பீராக. இவர்கள் எல்லாரையும் இருளின் மயக்கத்திலிருந்து தேவபிரகாசத்துக்கும், சர்வேசுரனுடைய இராச்சியத்துக்கும் அழைத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! உமது பரிசுத்த சபைக்கு இரட்சண்ணியமாயிரும். அமரிக்கையும் சுவாதீனமும் அதற்குக் கொடுத்தருளும். சகல ஜனங்கள் மத்தியில் ஒழுங்கும் சமாதானமும் உண்டாகும்படி செய்யும். இப்பூமியில் ஒருகோடி முனைமுதல் மறுகோடி முனைமட்டும் ஒரே குரல் சத்தமாய் நமக்கு இரட்சண்ணியங் கொண்டுவந்த இருதயத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! மகிமையும் வணக்கமும் திரு இருதயத்துக்குச் சதாகாலம் உண்டாவதாக என்று விடாது சத்தித்தொலிக்கக்கடவது.—

ஆமென்சேசு.

---



## சேசுக்கிறிஸ்துநாதருடைய திவ்விய இருதயத்துக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரச் செபம்.

எங்கள் திவ்விய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயமே! நாங்கள் மிகவும் நீசப்பாவிகளாயிருந்தாலும் உம்முடைய தயையை நம்பிக்கொண்டு, உமது சந்நிதியில் பயபக்தியுள்ள வணக்கத்துடனே சாஷ்டாங்கமாக விழுந்து, நீர் எங்கள் பேரில் இரக்கமாயிருக்கப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். எங்கள் பாவங்களையும் நன்றிகெட்டதனத்தையும் நினைத்து மிகவும் மனஸ்தாபப்படுகிறோம். அவைகளை அருவருத்து என்றென்றைக்கும் விலகிவிடவும், எங்களாலே ஆனமட்டும் அவைகளுக்குப் பரிகாரஞ் செய்யவுந் துணிகிறோம் சுவாமி. அடியோர்கள் உமக்குச் செய்த தோஷ துரோகங்களுக்காகவும், அக்கியானிகள், பதிதர், பொல்லாத கிறீஸ்துவர்கள் முதலானவர்கள் உமக்குச் செய்கிற சகல நிந்தை அவமானங்களுக்காகவும் மிகுந்த துக்க மனஸ்தாபப்பட்டு, அவைகளைத் தேவரீர் பொறுக்கவும், சகலரையும் நல்வழியிலே திருப்பி இரட்சிக்கவும் வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். உம்முடைய திரு இருதயத்துக்குச் செய்யப்

பட்ட சகல நிந்தை அவமான துரோகங்களுக்குப் பரிகாரமாக அற்பமாகிய எங்கள் ஆராதனை வணக்க தோத்திரங்களையுமல்லாமல் மோக்ஷத்தில் வாழுகிற சகல சம்மனசுகள் அர்ச்சியசிஷ்டவர்களின் ஆராதனைப் புகழ்ச்சிகளையும், பூலோகத்திலுள்ள சகல புண்ணியாத்துமாக்களின் ஸ்துதி நமஸ்காரங்களையும், மிகுந்த தாழ்ச்சி விநயத்துடனே தேவரீருக்குச் செலுத்துகிறோம். மீளவும் எங்கள் திவ்விய சேசுவே! எங்களுக்கு ஏக நம்பிக்கையே, அடியோர்களை எங்களை முழுதும் இப்போதைக்கும் எப்போதைக்கும் உம்முடைய திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம் சுவாமி! தேவரீர் எங்கள் இருதயத்தை உமது கைவசமாக்கிச் சுத்தப்படுத்தி அர்ச்சியசிஷ்ட இருதயமாகச்செய்தருளும். நாங்கள் சீவனோடே இருக்குமட்டும் எங்களை சகல சத்துருக்களுடைய சற்பனைகளிலேயும் நின்று காத்து இரட்சியுஞ் சுவாமி.

தேவரீர் சகல மனிதருக்காகவும் சிலுவை மரத்தில் சிந்தின விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து இந்த மன்றாட்டுகளைத் தந்தருளும் சுவாமி. ஆமென் சேசு.

---

### அர்ச். பாப்பானவரால் புதிதாய் அங்கீகரிக்கப்பட்ட சேசுநாதருடைய திரு இருதயப் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.



பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,— எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.
உலகத்தை மீட்டிரக்ஷித்த சுதனாகிய சர்வேசுரா, எங...
இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா, எங்களை...
அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களை...

1. நித்திய பிதாவின் சுதனாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

2. பரிசுத்த கன்னித்தாயின் உதரத்திலே இஸ்பிரீத்து சாந்துவினால் உருவான சேசுவின் திவ்விய இருதயமே,—

3. தேவ வார்த்தையான சுதனோடு ஓரே பொருளாய் ஒன்றித்திருக்கும் சேசுவின் திவ்விய இருதயமே,—எங்.

4. அளவற்ற மகத்துவ பிரதாப நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

5. சர்வேசுரனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

6. அதி உன்னத ஆண்டவரின் வாசஸ்தலமான சேசுவின் திவ்விய இருதயமே, எங்களை...

7. சர்வேசுரனுடைய வீடும், மோட்சத்தின் வாசலுமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

8. சிநேக அக்கினி சுவாலித்தெரியும் சூளையான சேசுவின் திவ்விய இருயமே,—எங்களை...

9. நீதியும் சிநேகமும் தங்கியிருக்கும் இல்லிடமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

10. தயாளமும் சிநேகமும் நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

11. சகல புண்ணியங்களுஞ் சம்பூரணமாய் நிறையப் பெற்ற சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

12. எவ்வித ஸ்துதி புகழ்ச்சிக்கும் முற்றும் உரிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

13. இருதயங்களுக்கெல்லாம் அரசும், அவைகளின் மத்திய ஸ்தானமுமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

14. ஞானமும் அறிவும் நிறைந்த பூரண பொக்கிஷமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

15. தெய்வத்துவ சம்பூரணம் தங்கி வாசஞ்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

16. உமது பிதாவுக்கு உகந்த பிரிய நேசமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

17. உம்மிடத்தில் நிறைந்திருக்கும் நன்மைகளை நாங்கள் அனைவோரும் பெற்று மகிழச்செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

18. நித்திய சிகரங்களின் ஆசையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

19. பொறுமையும் மிகுந்த தயாளமுமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

20. உம்மை மன்றாடிப் பிரார்த்திக்கும் சகலருக்கும் சம்பூரணங் கொடுக்குந் தாராளமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

21. சீவியத்துக்கும் அர்ச்சியசிஷ்டதனத்துக்கும் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...



22. எங்கள் பாவங்களின் மன்னிப்புக்கேற்ற பரிகாரமான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

23. நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

24. எங்கள் அக்கிரமங்களின் நிமித்தம் நொந்து வருந்தின சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

25. மரணமட்டுங் கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

26. ஈட்டியால் குத்தி ஊடுருவப்பட்ட சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

27. சர்வ ஆறுதலின் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

28. எங்கள் சீவனும் உத்தானமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

29. எங்கள் சமாதானமும் ஒற்றுமைப் பந்தனமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

30. பாவங்களின் பலியான சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

31. உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு இரட்சண்ணியமான சேசுவின் திவ்விய இருதயமே,

32. உம்மிடம் மரிக்கிறவர்களின் நம்பிக்கையாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

33. சகல அர்ச்சியசிஷ்டவர்களின் ஆனந்தமாகிய சேசுவின் திவ்விய இருதயமே,—எங்களை...

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமீ.

மு.—இருதயத்தில் தாழ்ச்சியுஞ் சாந்தமுமுள்ள சேசுவே,

து.—எங்கள் இருதயம் உமது இருதயத்தைப்போலாகும்படி கிருபை செய்யும்.

**பிரார்த்திக்கக்கடவோம்.**

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா! உமக்கு மிகவும் பிரிய குமாரனுடைய இருதயத்தையும், அவர் பாவிகள் பேரால் உமக்குச் செலுத்தின பரிகாரத்தையும், ஸ்துதி புகழ்ச்சியையும் கிருபையாய்ப் பார்த்தருளுஞ் சுவாமி. உமது இரக்கத்தை மன்றாடிக் கேட்பவர்களுக்குத் தேவரீர் இரங்கி மன்னிப்புக்கொடுத்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சுயஞ்சீவியராய் சதாகாலமும் இராச்சிய பரிபாலனஞ்செய்யும் உமது திவ்விய குமாரன் சேசுக்கிறீஸ்துநாதர் பெயரால் எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி.

ஆமென் சேசு.

1899-ம் வருஷம் ஏப்பிரல்-மீ 2-உ 13-ம் சிங்கராயரென்னும் அர்ச். பாப்பானவர், இந்தப் பிரார்த்தனையைப் பக்தியோடு சொல்லுகிற ஒவ்வொருவிசைக்கும் 300-நாட் பலனைக் கட்டளையிட்டிருக்கிறார்.

---

## பலனுள்ள சிறு ஜெபங்கள்.

### ஒவ்வொரு தடவையும் பலன்.

என் சேசுவின் மகா மதுரமான இருதயமே! நானே எப்போதும் மென்மேலும் உம்மை நேசிக்கச் செய்தருளும். (300-நாள் பலன்.)

தினசரி மாதமுழுதும் சொல்லிவந்தால், இஷ்டமானநாளில் ஒரு பரிபூரண பலன் அடையலாம். **9-ம் பத்திநாதர்.**

இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே! என் இருதயத்தைத் தேவரீருடைய திரு இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும். (300-நாள் பலன்.)
**9-ம் பத்திநாதர்.**

சேசுவின் திரு இருதயமே! என் நம்பிக்கையை உமதுபேரில் வைக்கிறேன். (300-நாள் பலன்.)

மாதத்துக்கு ஒருமுறை பரிபூரணபலன். **10-ம் பத்திநாதர்.**

சேசுவின் திரு இருதயமே! உம்முடைய இராச்சியம் வருக! (300-நாள் பலன்.) **10-ம் பத்திநாதர்.**

சேசுவின் திவ்விய இருதயமே! பாவிகளை மனந்திருப்பும், வியாதிஸ்தரைக் காப்பாற்றும், உத்தரிக்கிற ஸ்தலத்து பரிசுத்த ஆத்துமங்களை மீட்டருளும். (300-நாள் பலன்.)
**10-ம் பத்திநாதர்.**

சேசுவின் சற்பிரசாத மகா பரிசுத்த இருதயமானது வாழ்த்தப்படக்கடவது. (300-நாள் பலன்.)
**10-ம் பத்திநாதர்.**

அமலோற்பவ மரியோடு ஒன்றித்து சேசுவின் அதி பரிசுத்தமும் சிநேகமும் பொருந்திய சற்பிரசாத இருதயத்தை ஆராதிப்போமாக, அதற்கு நன்றி செலுத்துவோமாக, அதை மன்றாடுவோமாக, அதற்கு ஆறுதல் வருவிப்போமாக. (200-நாள் பலன்.)

தினசரி வருஷமுழுதும் சொல்லிவந்தால், ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாளன்று பரிபூரண பலன். 10-ம் பத்திநாதர்.

சேசுவின் சற்பிரசாத இருதயமே, குருக்களுடைய இருதயங்களுக்கு மாதிரிகையே, எங்கள்பேரில் இரக்கமாயிரும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

என் தேவனாகிய சேசுவே! எல்லாத்தையும் பார்க்க உம்மைச் சிநேகிக்கிறேன். (50-நாள் பலன்.)
9-ம் பத்திநாதர்.

சேசுவின் திரு இருதயமே, என் மட்டில் உமக்குள்ள சிநேகத்தை விசுவசிக்கிறேன். (300-நாள் பலன்.)
10-ம் பத்திநாதர்.

சேசுவின் மதுரமான இருதயமே, என் சிநேகமாயிரும். (300-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

எங்கள் நேசத்தால் பற்றியெரியும் சேசுவின் சற்பிரசாத இருதயமே, உமது நேசத்தால் எங்கள் இருதயங்கள் பற்றியெரியச் செய்தருளும். (200-நாள் பலன்.)
13-ம் சிங்கராயர்.

எல்லாம் உமக்கே, சேசுவின் திரு இருதயமே!
(300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

சேசுவின் திரு இருதயமே, வாழ்க! (300-நாள் பலன்)
9-ம் பத்திநாதர்.



சிநேகப்பலியான சேசுவின் திரு இருதயமே, என்னைச் சர்வேசுரனுக்கு உகந்ததும் பரிசுத்தமானதும் உயிருள்ளதுமான பலிப்பொருளாய் ஆக்கியருளும்.

சன்னியாச வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள், வார்த்தைப்பாட்டைப் புதுப்பிக்கும் கருத்துடன் சொன்னால் 50-நாள் பலன். 10-ம் பத்திநாதர்.

கருணாம்பர சேசுவே! ஆத்துமங்களை நேசிக்கிறவரே! தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத்தாயானவள் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து, இன்றுதானே பூமியிலெங்கும் அவஸ்தையாய்க் கிடந்து சாகப்போகிற பாவிகளைத் தேவரீருடைய திரு இரத்தத்தினால் சுத்தி பண்ணியருளும்.

அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இருதயமே! மரிக்கிறவர்களின்பேரில் இரக்கமாயிரும். (100-நாள் பலன்.)

தினசரி மும்முறை சொன்னால், மாதத்துக்கு ஒரு பரிபூரண பலன். 9-ம் பத்திநாதர்.

ஆண்டவராயிருக்கிற சேசுவே! மகா கருணை நிறைந்த உலக இரட்சகரே! உம்முடைய திரு இருதயத்தை முன்னிட்டு நாங்கள் தேவரீரிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறதென்னவெனில்: சிதறிப்போயிருக்கிற ஆடுகளெல்லாம் அவர்கள் ஆத்துமங்களின் மேய்ப்பனும் மேற்பிராணியாருமான தேவரீரிடம் வந்து சேரட்டும். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலஞ் சீவியருமாய் இராட்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்சேசு. (300-நாள் பலன்.)

மாதத்துக்கு ஒருமுறை பரிபூரண பலன். 10-ம் பத்திநாதர்.

திரு இருதயத்தின் ஆண்டவளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

## ஒருநாளில் ஒருதடவை மாத்திரம் பலன்.

சேசுவின் மகா பரிசுத்த இருதயம் எங்கும் சிநேகிக்கப்படுவதாக! (100-நாள் பலன்.) 9-ம் பத்திநாதர்.

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடையவும், அவருடைய திருத்தாயாரான மகிமைபொருந்திய கன்னிமரியாயுடையவும் அன்புள்ள இருதயங்களும், மகா மதுரம்பொருந்திய நாமங்களும் என்றும் ஆசீர்வதிக்கப்படக்கடவதாக! (300-நாள் பலன்.)
மாதத்துக்கு ஒருமுறை பரிபூரண பலன். 10-ம் பத்திநாதர்.

மகா மதுரம் பொருந்திய சேசுவே! என்னிடத்தில் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், சிநேகத்தையும் அதிகரித்து, நொறுங்கித் தாழ்ந்த இருதயத்தை எனக்குத் தந்தருளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

சேசுவின் சற்பிரசாத இருதயமே, எங்கள்பேரில் இரக்கமாயிரும். (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

உலகத்திலுள்ள சகல தேவநற்கருணைப்பெட்டிகளிலும் எழுந்தருளியிருக்கும் சேசுவின் சற்பிரசாத இருதயத்துக்கு உலக முடிவுவரையில் எந்நேரமும் ஸ்துதியும் தோத்திரமும் உண்டாகக்கடவது. (100-நாள் பலன்.)
9-ம் பத்திநாதர்.

### திரு இருதயப் படத்துக்குமுன் செபம்.

என் நேச சேசுவே! அடியேன் (இன்னான்) தேவரீர்பேரில் வைத்த பத்தியைக் காண்பிக்கவும், என் துரோகங்களைப் பரிகரிக்கவும், தேவரீருக்கு என் இருதயத்தைக் கையளித்து என்னை முழுமையும் தேவரீருக்கு நேர்ந்து



ஒப்புக்கொடுக்கிறேன். இனி உம்முடைய அநுக்கிரகத்தைக்கொண்டு ஒருபோதும் எந்தப் பாவத்தையும் செய்வதில்லையென்று கெட்டியான மனதோடு பிரதிக்கினை பண்ணுகிறேன். ஆமென்சேசு. (100-நாள் பலன்.)
மாதத்துக்கு ஒருமுறை பரிபூரண பலன். 7-ம் பத்திநாதர்.

சேசுவின் மகா பரிசுத்த இருதயமே, பரிசுத்த திருச்சபையின்பேரிலும் அர்ச். பாப்பானவரின்பேரிலும் சகல குருக்களின்பேரிலும் உமது ஆசீர்வாதங்களை ஏராளமாய்ப் பொழிந்தருளும்; நீதிமான்கள் கடைசிவரையில் பிரமாணிக்கமாயிருக்கச் செய்தருளும், பாவிகளை மனந்திருப்பியருளும், அஞ்ஞானிகளுக்கு ஞான வெளிச்சத்தை அளித்தருளும்; எங்கள் பெற்றோர் உறவினரையும், எங்கள் சிநேகிதர்களையும், எங்கள் உபகாரிகளையும் ஆசீர்வதியும். சாகிறதறுவாயிலிருப்போருக்கு உதவியாகவாரும், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களை மீட்டருளும், உமது சிநேகத்தின் மதுர இராச்சியத்தை சகல இருதயங்களின்பேரிலும் பரப்பியருளும். ஆமென்சேசு. (300-நாள் பலன்.) மாதத்துக்கு ஒருமுறை பரிபூரண பலன்.

சேசுவின் மகா பரிசுத்த இருதயத்தை நேசிக்கிறவர்களுக்குப் பாதுகாவலும் முன் மாதிரிகையுமான அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (100-நாள் பலன்.) 13-ம் சிங்கராயர்.

## திவ்விய இருதய ஸ்தோத்ரம்.

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

நம நம ஞானஊற்றே என்றுஞ்சுரக்கும்
நம நம ஞான ஊற்றே.

அநுபல்லவி.

நம நம ஞானஊற்றே நமம்பொழி தேவஆற்றே
அமரர் என் ஸ்ரேயாதேற்றே அமலன் இதயம் இற்றே. (நம.)

சரணங்கள்.

1 ஸ்துதி ஸ்துதி செல்வநாதா நித்யம் உமக்கு
ஸ்துதி ஸ்துதி செல்வநாதா சோதிப்பிரகாச போதா
மதியிலார் எம்மை நீதா மனமுடன் ஆள்வாய் தாதா. (நம.)

2 அனை அனை என்னை உந்தன் அன்பின் இதயம்
அனை அனை என்னை உந்தன் அருள்பெற என்றும் எந்தன்
இணையிலாத்துயர் தீர்ந்தேன் இடர்ஒழித்திட வந்தேன். (நம.)

3 தயை தயை எங்கள் மீதில் தர்ம இதயம்
தயை தயை எங்கள் மீதில் தமியர்சூழ் பகை வாதில்
இயைஉடல் கொடும் ரூதில் இரங்கி எமைக்காத்திடில். (நம.)

4 ஜெயம் ஜெயம் என்றும்பாடு திவ்விய இதய
ஜெயம் ஜெயம் என்றும்பாடு தினம் அதின் அருள்தேடு
பயமில்லாவீழிசுகி பாவம் எல்லாம் விட்டோடு. (நம.)

---



## திரு இருதயம் ஞானத்தின் பொக்கிஷம்.

இராகம்-மத்தியமாவதி ரூபகதாளம்.

பல்லவி.

தேவபொக்கிஷமான இருதயமே எமைக்கைதூக்கி
தேற்றி இரட்சிப்பதே எங்கள் நயமே.

அநுபல்லவி.

ஆவல்கொண்டே உந்தன் காவலை அண்டினோம்.
பாவவிஷம் நின்றென்றும் மேவுறக்காப்பாய். (தேவ.)

சரணங்கள்.

1 தாயினும் விடாத பட்சத்தோடு சற்றும் அயராத்
தாங்குவாய் உன்இதயம் எம்வீடு உன்பெயர்சொல்ல
பேய்செய் தந்திரமோடு நீங்கும்கேடு சகல செல்வ
பேருலகம் சேர்வோம் அஃதெம் நாடு அருள்சுரக்கும்
தூயவரங்களை நேயர்க்கு ஓயாமல்
ஈய உனக்குமனம் சாயவே இல்லையோ. (தேவ.)

2 அன்பினலெம்மோடென்றிருப்பாயே மனிதர் செய்யும்
அக்கிரமம் யாவும் மன்னிப்பாயே உனை நினைத்து
நம்பிச் செய்வதெல்லாங் குறிப்பாயே உன் இருதய
நற்றிராசில் நீயே நிறுப்பாயே பலவகையில்
துன்பஉடல்நிதம் வம்புகொண்டேவிஷ
இன்ப மதைத்தேடிடல் என்பதுபொய்யோ ? (தேவ.)

3 தந்தை தன் பிள்ளையை நோக்கல் போலே சற்றுந்தணியா
தாகமெனும் ஆசை விடாதாலே கிருபைகூர்ந்து
சிந்தை நொந்து எம்மை நோக்குங்காலே உன்னை அண்டி
சேர்ந்துகூடி சூழ்தல் நல்லபாலே ஆனதாலே
விந்தையார் புவியுள்ள தந்திரவாழ்வெல்லாம்
நிந்தையாய் வெறுத்துநாம் எந்தையைப் பணிவோம். (தே.)

4 தேவதுரோகிகள் உன் தயையை மதியார் பதிதர் மற்றோர்
திவ்ய உந்தன் இதயத்தைத் ஸ்துதியார் கொடும் விஷம்சூழ்
பாவம்நீக்கி உன் பெயரைப் பதியார் மனந்தெளிந்து
பாருலகின் அற்பவாழ்வை மிதியார் தனையநிறைந்த
ஜீவிய அமுதே உன் காவலை அண்டினோர்
மேவும் இடர்கள் நீங்கி ஆவல்கொண்டுய்வார். (தேவ.)

# திரு இருதயத்தின் அணைகடந்த தயை.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

## பல்லவி.

அருள்சூழ் இதயமே அடியோர் செய்யும் பவம்
அனைத்தும் பொறுத்தருள்வீர்.

## அநுபல்லவி.

அருள்சூழ்த்தொனிர் இதயமே மருள் ஒழிப்பாய் நிதமுமே
வெருளும் மனமதமுமே தெருளச்செய் எவ்விதமுமே. (அருள்.)

## சரணங்கள்.

1 விண்ணுலகம் நின்றெமக்காய் மண்ணில் மனுவாக வந்தாய்
எண்ணரும் அற்புதஞ்செய்தாய் உண்ண உன்னை முற்றுந்தந்
வேந்தனே கிருபை சாந்தனே உன்னை [தாய்
வேண்டும் அடியோர்க்குத் தினம் உண்டு கொடுத்தாள நினை.
(அருள்.)

2 வானில் ராஜனுயிருந்தும் ஈனமனுடர் பொருந்தும்
நரகம் சேரா வந்தும் ஞான அருள் ஊட்டித்தந்தும்
நேசனென்றெய் எமைக்கரை தூக்கிறுய் உன்னை
நித்தியம் விடாமுன்றையில் ஸ்துத்தியம்சொல்லி ஸ்துதிப்போம்.
(அருள்.)

3 தாய்தன் மக்களோடுகூடி நேயமுடன் வாழ்வாள் நாடி
ஆயதுபோல் எம்மைத்தேடி தூய அன்பால் வாழ்வாய் சூடி
ஆயனே தயை சூழ்நேயனே நாங்கள்
அண்டிஉன் இதயம்வந்தோம் தெண்டம் சுவாமி என்று சேர்ந்
[தோம். (அருள்.)

4 பாவிகள் உன்னை ஒழித்தார் பூவில் பலநோய் விளைத்தார்
ஜீவனும் உன்னைப் பழித்தார் பாவமயலால் விழித்தார்
தேங்கியே மனத்தில் வீங்கியே உன்னைத்
தேடிநாங்கள் ஓடிவந்தோம் வீடில்சேர்ந்திடவே நேர்ந்தோம்.
(அருள்.)

(தே ஸ்தோத்திரக் கீர்த்தனைகள்.)